# ஒரு வினவலும் உரிய விடையும்

## (திருக்குறளைப் பற்றி)

இரா. இளங்குமரனார்

**திருவள்ளுவர் தவச்சாலை**

*திருவளர்குடி (அல்லூர்)*

*திருச்சிராப்பள்ளி மாவட்டம் - 620 101*

*தொலைப் பேசி : 0431-2685328*

# நூற்குறிப்பு


| | |
|---|---|
| நூற்பெயர் | ஒரு வினவலும் உரிய விடையும் |
| ஆசிரியர் | இரா. இளங்குமரனார் |
| மொழி | தமிழ் |
| பொருள் | திருக்குறள் ஆய்வு |
| முதற் பதிப்பு | மே - 2013 |
| பக்கம் | viii + 44 = 52 |
| எழுத்து | 13 புள்ளி |
| தாள் | 13.7 வெள்ளை தாள் |
| அளவு | 1/8 |
| படிகள் | 1000 |
| விலை | உருபா : 30/- |
| உரிமை | ஆசிரியர்க்கு |
| வெளியீடு | திருவள்ளுவர் தவச்சாலை<br>அல்லூர் - 620 101,<br>திருச்சிராப்பள்ளி மாவட்டம். |
| நூலாக்கம் | "தி பிரிண்டிங்கு அவுசு"<br>திருச்சிராப்பள்ளி - 23 |

நூல் கிடைக்குமிடம்:

- **திருவள்ளுவர் தவச்சாலை**
  அல்லூர் 620 101, திருச்சிராப்பள்ளி மாவட்டம்,
  தொலைப்பேசி எண் : 0431 - 2685328

## முன்னுரை

**ஒருவினா:**

நான்காம் முறையாக யான் மலையகம் சென்றிருந்த போது (2011) – திருக்குறள் பற்றிய ஒரு பொழிவின் போது – **"புகழ் வாய்ந்த திருக்குறள் தமிழகத்திலும் பிற இடங்களிலும் பெரிதும் பரவாமை ஏன்?"** என்று வினவினார் ஒருவர்.

**சுருங்கிய விடை:**

உங்கள் வினவுதல் சரியானதே. அதற்குரிய விடை விரிவுடையது. சடங்கு, புனைவு, கண்மூடித்தனம், கழுவாய் முதலியவற்றை ஏற்காத நூல் திருக்குறள். குழுகாயக் கேடானவற்றைக் கண்டித்துக் கூறும் நூல் அது. ஆதலால், **ஒழுக்கம் அறம் என்பவற்றைப் போற்றாத உலகினரால்** ஏற்கப்படவில்லை எனலாம். "இன்னொன்று மிகுதியான பொதுமக்களுக்குக் கல்வியறிவு தரப்படாத நிலையுமாம்" மேலும், திருக்குறளைப் படித்தவர்களும், புகழ்க்கும் பதவிக்கும் பாராட்டுக்கும் படித்தார்களே அல்லாமல், **நடைநூலாகக் கொள்ளவில்லை.** எனினும், புலமையாளர்களும் வெளி நாட்டவர்களும் திருக்குறளின் சிறப்பை அறிந்து தொடர்ந்து போற்றியே வந்தனர். உரை , கட்டுரை, கதை, நாடகம், மொழிபெயர்ப்பு எனப்பரவவும், இதுகால் இள மழலையரும் மனப்பாடம் செய்யவுமாக வளம் பெறவே செய்கிறது.

அது, சமய நூலாகவோ, கடவுள் அருளியதாகவோ, கடவுள் அடியார் வழி மண்ணில் இறக்க முற்றதாகவோ, பரப்பும் தொண்டர்களைக் கொண்டதாகவோ இல்லாமையால், பொதுமக்களைச் சென்று அடையவில்லை. ஆனால், **இந்நாளில் நிலைமாறி வருகின்றது.** தமிழில் எந்நூலுக்கும் இல்லாத சிறப்பு திருக்குறளுக்கு ஏற்பட்டுள்ளது. மன்றங்கள் அமைப்புகள் பெருகி வருகின்றன. திருவள்ளுவரைப் பரப்பும் ஏடுகளும் உள்ளன. மொழிபெயர்ப்புகளும் புத்துரைகளும் தோன்றிப் பெருகுகின்றன. ஆதலால், **உலக நூலாகத் திருக்குறள் கொள்ளப்படும் நிலையை நெருங்கிச் செல்கின்றது. இது பற்றித் தனிச் சுவடி எழுதுவேன்** என்றேன்.

**சுவடிப் பெயர் :**

**அவ்வினாவின் விளைவுதான், இச்சுவடியாக உருக்கொண்டது எனல் உண்மையாம்.** ஆதலால், **ஒரு வினவலும் உரிய விடையும்** எனப் பெயர் பெற்றதாம்.

**திருக்குறள் பரவல்:**

திருவள்ளுவர் சமயம் திருக்குறள் சமயம் என ஒரு சமயம் தோற்ற முறாவிடினும், திருக்குறள் அறநூல், தமிழர் நெறிநூல் என்னும் பேற்றை இக்கால் பெற்று வருகின்றது. கற்றவர்களாலும் இளைஞர்களாலும் போற்றப்படும் நிலை உண்டாயதால் எதிர்காலம் திருக்குறளுக்கு ஏற்றமிக்க காலமாகத் திகழும் என்பதில் ஐயமில்லை? **திருக்குறள் இல்லா நூலகம் இல்லை; திருக்குறளை எடுத்துக்காட்டா நூலில்லை; திருக்குறளைப் பயன்படுத்தா மேடை இல்லை; திருக்குறளைச் சுட்டாத இதழில்லை என்னும் நிலையே அதன் விடிநாள் ஒளிக்குச் சான்றாம்.**

திருக்குறளை ஓதித், திருமணம், புதுமனை புகுவிழா, மணிவிழா, படத்திறப்பு, வழிபாடு என்பவை நிகழும் நிலையும், திருக்குறள் போட்டி, திருக்குறள் ஒப்பித்தல், திருக்குறள் கவனகம் என்பனவும் பெருகலால் எதிர் காலத்தில், திருக்குறள் உலகளாவிய தன் சுடரொளியைக் கட்டாயம் பரப்பும். ஏனெனில், உலக அறிஞர்கள் பார்வை திருக்குறள் மேல் படிந்துள்ளமை நல்ல ஊக்குதலாம். உலகளாவ வாழும் தமிழார்வலர்களும் திருக்குறள் பற்றாளர்களும் திருக்குறளை நடைப்படுத்திப் பரப்புதலில் ஊன்றியுள்ளமையும் கண்கூடு. மேலும், திருவள்ளுவர் சிலை, படங்கள், கோட்டங்கள் எனப் பெருகி வருதலும் பொதுமக்கள் உள்ளத்துள் புகும் ஒருவழியாம். பெரிதும் சிற்றூர்களிலும் கூடத் திருவள்ளுவர் சிலைகள் நிறுவப்படுகின்றன; மன்றங்கள் கழகங்கள் கிளர்கின்றன என்பனவும் சான்றுகள்.

**வாழ்வியல்நூல்:**

இவையெல்லாம் திருக்குறள் பரவுமாறு தூண்டினாலும் துலங்கினாலும் மெய்யான துலங்கல் திருக்குறள் வாழ்வியல் கடைப்பிடி நூல் என்னும் நிலையை அடைதல் அன்றி வேறு இல்லை.

**எதிரும் புதிரும்:**

திருக்குறளுக்குக் கோட்டமும், திருவள்ளுவருக்குச் சிலையும், திருக்குறள் விளம்பரமும், திருக்குறள் தேசிய நூல் என நிறைவேற்றலும் உடைய அரசு, மதுக்கடைகளைப் பெருக்கலும், சூதாட்டக் கழகங்கள், பரிசுச் சீட்டுகள் நடத்துதலும், இலவசங்களால் வாக்குப் பெறுதல், கல்விக் கொள்ளை, வாரியங்கள்வழி வாரிச் சுருட்டல், கையூட்டு முதலியவற்றில் "நீ முந்தி, நான் முந்தி, 'நீ செய்யவில்லையா' நான் செய்ததுதான் தெரிகிறதா?" என்னும் நிலையில் இருந்தால், எப்படி வாழ்வியலாகும்?

அரசுத் தலைமையில் செப்பமில்லை எனின், அடிவரை புரையோடிப் புழுத்துப் போகுமா இல்லையா?

அரசும் அலுவலகங்களும், கல்வி நிலையங்களும், வேலை வாய்ப்புச் செய்யும் இடங்களும், முறை மன்றங்களும், செப்பமடையாமல், நடவடிக்கை எடுப்பவர்களே ஊழலில் முதன்மையராக இருக்கும் நிலையில் எப்படி மக்களிடம் செப்பம் காணமுடியும்?

செவ்விய அலுவலன் பந்தாடப் படுகிறான்.

நேர்மையன் தண்டிக்கப்படுகிறான்.

குற்றங்களைக் கண்டு பிடிப்பவன் கொலை செய்யப்படுகிறான்.

கடத்தல்காரன் கட்சி அரசியலில் பெரும்புள்ளியாக இருக்கிறான்.

கொள்ளையன் கூட்டாளியாய் ஆட்சியரோடு கும்மாளம் போடுகிறான். கூலி தந்து கொல்லுதற்கு என்றுள்ள வன்முறைக் கூட்டம் தலையெடுக்கத் தலைவர்களே உந்துதலாக உள்ளனர்! இந்நிலையில் சட்டம் நாறிப்போய்க் கிடக்கிறது. அன்றன்று ஏதாவது சலுகையால் உழையாமல் வாழ்வு நடத்தினால் போதும் என்ற நிலைக்கு நாடும், பெரும்பால் மக்களும் வந்து விட்டனர்.

சட்டம் செய்பவர்களே சட்டத்தை உடைக்கும் நாட்டில்

சட்டமெல்லாம் மரச்சட்டமும் கண்ணாடிச் சட்டமும் தாமே

**தீர்வு:**

'இனமானம்' என்றவர் 'இழிமானர்' என மக்களால் எண்ணும் கீழ் நிலை ஆகிய நிலையில், **மொழி இனமான நேரிய தலைமை ஒன்று உருவாகினால் அன்றி வள்ளுவம் அங்கும் இங்கும் ஓரிருவர், சிலர், பலர், நடைநூலாகுமே அன்றி, மக்கள் – ஆள்பவர்கள் – நடைநூலாக** ஆகப் போவதில்லை!

மேடைக்கும் எழுத்துக்கும் அழகாகக் கொள்ளப்பட்டால் மட்டும், அறநூற் பயன் எய்துமா திருக்குறள்?

**ஐயுறவு:**

"சமயநூல்களின் ஆணைப்படி நடப்பவரே சமயத்தவர் என்றால். விரல்விட்டு எண்ணும் அளவில் தானும் அச்சமயத்தில் கிட்டுவரா? சமயச் சடங்கர், சமயத் தோற்றத்தர், சமயச் சார்பினர் என்று **பெயரளவில் தாமே உள்ளனர்! அப்படியிருக்கச் சமயநூலும் ஆகாத – சமய**

**அமைப்புகளும் அடியார்களும் அமைக்கப்படாத வள்ளுவம், நடைநூல் எனத் திகழ முடியுமா?"** என ஐயுறுவார் உளர்! அவர் ஐயத்தில் உண்மை இல்லாமல் இல்லை! ஆனால், **சமயச் சார்பற்ற சால்புநூல் எனத் திருக்குறள் இருப்பதால், சமய மோதலுக்கு இடமில்லாச் சிறப்பாவது உண்டு இல்லையா?** மேலும், அன்பு, அறம், நட்பு, வாய்மை, ஊழ், தவம், பிறப்பு, வினை, துறவு என்பவை பற்றிய தெளிவுகளால் திருக்குறள் நடைநூலாகத் திகழப் பெருவாய்ப்பைக் கொண்டுள்ளதாம். அதனாலே மற்றைச் சமயத்தாரும் திருக்குறளைச் சால்பு நோக்கில் காண்கின்றனர். அந்நிலை, திருக்குறள் நூலமைப்பால் ஏற்பட்டதன்றிச் சார்பால் ஏற்பட்ட தில்லை! **சால்புத் தோற்றம் என்றும் சார்புத் தோற்றத்தை வென்றே நிற்கும் என்பது உறுதியாம்.**

**இந்நூல் இயங்கு முறை:**

"இப்படிச் சொல்லியிருந்தால் அதனை ஏற்றுப் போற்றியிருப்பர் பொது மக்கள்" என்பது முதற்பகுதியாக இடம் பெறுகிறது. (1-13.).

சிலர், வள்ளுவரிடமே வினவி விளக்கம் பெறுவதாக அமைகிறது. இரண்டாம் பகுதி (14-23).

பொதுவிளக்கமாக அமைகின்றது **மூன்றாம் பகுதி** (24-38).

நிறைவில், நூல் தொகுப்பென இணைப்புகளும் உள. (39-42)

**நன்றி:**

வழக்கம் போல் தவச் சாலை நூல்வெளியீடுகள் அனைத்தையும் மெய்ப்புப் பார்த்து உதவும் மேம்பாட்டாளர். மேதக்க படைப்பாளர், முனைவர் தமிழ்த்திரு. பி. தமிழகனார் அவர்கள்; தமிழ் வரவு அன்றி வேறு வரவு எதுவும் கருதாத அவர்பணியை ஏற்றுப் போற்றுபவர் அவர்தம் அருமைத் துணைவியார்; செவ்விய வகையில் குறித்த காலத்தில் அச்சிட்டு உதவும் திருச்சிராப்பள்ளி அச்சுக் குழுமத்தார் - ஆயோர்க்கு நெஞ்சார்ந்த நன்றியுடையேன்!

வாழிய நலனே! வாழிய நிலனே!

இன்ப அன்புடன்,
**இரா. இளங்குமரன்**
12 வைகாசி 2044
26.05.2013

## நூல்வரவு

1952 ஆம் ஆண்டு விருது நகர் மாவட்டம் தளவாய்புரம் பு.மூ. மா. உயர்பள்ளியில் பணியாற்றினேன். தளவாய்புரத்திற்கு மேல்பால் இரண்டு அயிரங்களில் (கி.மீ) உள்ள **சேற்றூர் மேட்டுப் பட்டியில்** குடியிருப்புக் கொண்டேன்.

அங்கிருந்த நாளில் எங்கள் குடும்பத்துடன் ஒன்றிய குடும்பங்களும் பெருமக்களும் பலர். அவர்களுள் தலைப்பட்டது திரு. **நீராவி** என்பார் குடும்பம்.

நீராவியார், சாயலில் என்தந்தை அனையர்; அன்பிலும் அப்படியே! அவர்தம் ஆண்மக்களுள் மூத்தவர் **நீ. குருசாமி** எங்கள் வீட்டுப்பிள்ளையாகவே ஒன்றினார். இளையவர் **நீ. நீராவி.** தந்தை பெயரே கொண்டவர்!

இருவரும் தளவாய்புரத்தில் பயின்றனர். என்தொடர்பு அவர்களுக்குத் தமிழ்க் கல்வியின் மேம்பாட்டை யூட்டியது. இருவரும் தமிழ்ப் புலமையராய் அரசு உயர் நிலை, மேல் நிலைப் பள்ளிகளில் பணியாற்றிச் சிறந்தனர்.

மணங்கொண்டு மனைவி மக்களொடு சிறந்த வாழ்வினராய் – பாராட்டும் பான்மையராய் – ஓங்கி வளர்ந்தனர்.

1958 முதல் என்வாழ்வும் பணியும் மதுரை ஆயிற்று. ஆயினும் எங்கள் தொடர்பு பெருகியே வந்தது.

திரு. குருசாமி ஓய்வு பெற்றுச் சிந்தாமணி (புளியங்குடி சார்ந்தது) சார்ந்தார். திரு. நீராவி மேட்டுப் பட்டியிலேயே வாழ்ந்தார். தம் பெற்றோர் வாழ்ந்த இல்லத்தை வளப்படுத்தியும் இருந்தார்.

இளம் பருவத்தில் என்னிடம் பயின்ற **பழனியம்மாள்** என்பார், நீராவியார் வீட்டின் பக்கலே குடியிருந்தார். அவர் என்மீது பேரன்பு கொண்டவர். எழுபதை ஒட்டிய அகவையிலும், கோல் காலாகத் திருச்சிராப்பள்ளித் தவச்சாலைக்குத் தாமே எய்தினார். அந்நிலை என்னை உருக்கியது. இனி இத்துயருடன் வர வேண்டா. தென்காசிப்

பக்கல், பல்கால் செல்வேன். வாய்த்த போது யானே வந்து உங்களையும், நீராவியையும் பார்ப்பேன் என்று உறுதி கூறினேன்!

திருமணம் ஒன்றன் தொடர்பாக யான் புளியங்குடி (பூழியன் குடி) செல்ல நேர்ந்தது. திரும்புகாலில் பழனியம்மாளைப் பார்க்கவும், நீராவியைப் பார்த்துச் சில நூல்கள் தரவும் எண்ணினேன். நீராவி எதிர் கொண்டிருந்து அழைத்துச் சென்றார். குடும்பத்தவர் அனைவரையும் கண்டு மகிழ்ந்தேன்: பழனியம்மாளையும் கண்டேன்.

அப்பொழுதில் நீராவியார் நூலைப் போல் பத்துமடங்குத் தொகைவழங்கினார். பெருந் தொகை இது; வேண்டா என மறுத்தும் கேட்டாரில்லை. கட்டாயமாக வழங்கினார். "இப்பணம் தமிழ் அன்பால் வாய்த்த பணம் இது தமிழுக்கே ஆகவேண்டும்" என்னும் எண்ணத்தால், **"ஒரு வினவலும் உரிய விடையும்"** என்னும் இந்நூலை வெளியிட அத் தொகையைப் பயன்படுத்திக் கொண்டேன்.

தமிழன்பு தமிழ்த் தொண்டாகத் தமிழ்க் கொடையாக உருக் கொள்ளல் தமிழ் வளமாதற்கு எடுத்துக் காட்டாக இலங்குதல் சீரியதாம் எனக் கூறி என் தகவார்ந்த நன்றியை அவர்கள் இருவரும் பேராப் பெருநிலையர் ஆகிவிட்டமையால் - அவர்கள் குடும்பத்தவர்க்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

☆ ☆ ☆

# நூல்

1. "வேண்டுவார் வேண்டுவ வெல்லாம் ஈவான்"

என்று கடவுளைப் பாடியிருந்தால், வள்ளுவர் கடவுள் அடியார்களால் தலைமேல் கொள்ளப்பட்டிருப்பார். "வேண்டுதல் வேண்டாமை இலானை" அல்லவோ சுட்டுகிறார்.

மேலும், "எண்ணியர் திண்ணியராயின் எண்ணிய தெய்துவர்" என்று

கற்பார் தலைமேல் அல்லவா பாரத்தைப் போடுகிறார்.
"எண்ணித் துணிக" என்றும் "எண்ணுவ தெண்ணுக" என்றும்
"எண்ணுவ தெண்ணின் எளிதில் எய்துவர்" என்றும் அல்லவோ,
சுமை சுமையாய்ச் சுமத்துகிறார்? **எண்ணுவார் தாமே ஏற்றுப் போற்றுவர்?**

★ ★ ★

2. "இறைவன்" நாமாவளியை நாளும் பொழுதும் இடைவிடாமல் கூறுக: நீங்கள் நாடிய வெல்லாம் கூடி வரும்"

என்று வள்ளுவர் கூறியிருந்தால், அவர் அடியாராய்க்

கொடி பிடித்திருப்பார், கோடி கோடிப்பேர்!
ஆனால் அவர்,
முயற்சி திருவினை யாக்கும்; முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்"

என்றும்,

"மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த
குடிமடியும் தன்னினும் முந்து"

என்றும், உன்முயற்சியிலேயே உன் வெற்றி உள்ளது என்றும் சொன்னால் கூடி நின்று கும்மாளம் போடுவார்களா? 'ஆள் வினை உடைமை' என்றோர் அதிகாரம் அல்லவோ வகுக்கிறார்!

★ ★ ★

3. செய்யும் பாவங்களுக் கெல்லாம் பரிகாரம் கூறியிருந்தால்,

அவர்க்குப் பரிவட்டம் கட்டி, ஊருலாக் காட்டியும்
தேருலாக் காட்டியும் திளைத்திருப்பார்கள்!
'பரிகாரத்' துக்கு மேலேயும் 'பரிகாரம்' செய்து விட்டுப்,
பழைய பாவத்தின் மேலும் பாவம் செய்து 'பரிகாரமும்' செய்து பாவம் தீர்ப்பார்கள்! தீர்த்துக் கொண்டே இருப்பார்கள்!

ஆனால் திருவள்ளுவர், **"தப்புச் செய்யாதே: ஒரு வேளை தப்புச் செய்து விட்டால் அதனைத் திரும்பச் செய்யாதிருப்பதே அத் தப்புக்குத் தீர்வு"** என்கிறார்.

"எற்றென் றிரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று"

என்று சொன்னால், குழைந்து வளைந்து கும்பிடு போட்டுக் கொண்டு இருப்பார்களா? மீளமீளப் பாவம் பண்ணாதே என்று வழிகாட்டினால் பழியே வாழ்வானோர் ஏற்பரா?

★ ★ ★

4. "கொள்ளையடித்தும் கோயில் கட்டு : குற்றமேதும் இல்லை: கடவுள் அருள்பாலிப்பார்" என்று வள்ளுவர் கூறியிருந்தால், அவரைத் தலைமேல் தூக்கிக்,

கொள்ளையர்களும், கொடுங்கோல் கொள்பவரும்
கொண்டாட்டம் போட்டிருப்பார்கள்.

ஆனால், அவரோ ஆளும் அரசனைப் பார்த்தே - அமைச்சனைப் பார்த்தே, "மக்களைக் கொடுமைப்படுத்தி வரிவாங்கினாலே நீங்கள் வேல் கொண்டு கொள்ளை யடிக்கும் கொள்ளைக்காரர் தாம்; நீங்கள் அரசரோ அமைச்சரோ ஆகமாட்டீர்" என்கிறார்!

"வேலொடு நின்றான் இடுவென்றது போலும்
கோலொடு நின்றான் இரவு"

என்றால், கொள்ளையடிப்பவனோ கொடுங்கோல் செலுத்துவனோ அவரைக் கொஞ்சி நின்று குவிந்து வணங்கிக் கிடப்பானா?

★ ★ ★

5. "ஆள்பவனே, நீயே ஆண்டவன்: ஆண்டவன் வேறு நீ வேறு இல்லை. ஆதலால், ஆண்டவனாகிய உன்னை இறைவன் கைவிடமாட்டான். எல்லாப் பேறுகளும் நல்குவான்; கோயில்குளம் தானம் தருமம் எனக் கொடுத்துக் கொண்டு கோயில் பணி செய்தாலே போதும்"

என்று சொல்லியிருந்தால், **வள்ளுவர்க்கும் கோயில் எடுத்து, அருச்சனை ஏற்பாடும் பிறபிற சிறப்புகளும் செய்திருப்பான்!**

ஆனால் அவரோ, "ஆள்பவனே ஆள்பவனே, நீ முறைகேடு சிறிதும் இல்லாமல் ஆட்சி செய்தால் போதும்; அந்த முறையான அறமே உன்னை எக்குறையும் இல்லாமல் காக்கும்" என்கிறார், எந்த ஆட்சியாளன். **"அறங் கூறிய அண்ணலே உம் ஆணையே ஆணை: அதனை மீறி நடக்கமாட்டேன்"** என்று உறுதி கூறி, **ஒளி வழிபாடு செய்து நிற்பான்?**

"முறை செய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும்."

"இறைகாக்கும் வையக மெல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்"

என்றல்லவோ சொல்கிறார் திருவள்ளுவர்! ஆள்பவர்க்கு மகிழ்வாமா இது?

★ ★ ★

6. செல்வர்களே செல்வர்களே,

சேர வாருங்கள்! நீங்கள் இலக்கமாய்க் கோடி கோடியாய்க் குவிக்கிறீர்களே செல்வம்! இதற்குக் காரணம் **நீங்கள் முற்பிறவியில் செய்த புண்ணியமே!** உங்களைப் போல் தானே அவரும் வணிகர். உங்களுக்கு அலுங்காமல் செல்வம் குவிய அவர் நாயாக – பேயாக – ஓடி ஆடி உழைக்கிறார், ஏன் உங்களைப் போல் செல்வம் அவர்க்குச் சேரவில்லை? அவர், **முற்பிறவியில் புண்ணியம் செய்யாத பாவி! அவர் வறுமையே அதனைக் காட்ட வில்லையா?** என்று திருவள்ளுவர் சொல்லியிருந்தால், அவர்க்குக், கோட்டை, கோபுரம்,

**கோயில் என்ன எல்லாமும் எழுப்பியிருப்பர்! செல்வச் செழிப்பர் அல்லரோ அவர்கள்! ஆனால், திருவள்ளுவரோ, செல்வர்களே,** உங்களிடம் கோடி கோடியாகச் செல்வம் குவிந்து கிடப்பதால், புண்ணியம் செய்தோம், அறத்தோடு வாழ்ந்தோம், அருளாளனாகத் திகழ்ந்தோம், ஒப்புரவாளனாக, நடு நிலையனாக – **இருந்தோம், எனக் கணக்குப்** போடாதீர்!

“பொருட் செல்வம் பூரியார் கண்ணும் உள” என்பது அறிக. பொருட் செல்வம் **செருக்குமிக்கவர், கயமையர்** – என எவரிடமும் இருக்கும்! வறியவரையும் பாவியென எண்ணாதீர்! அவர் முயற்சி இல்லாதவர்; முறைகேடான செலவாளர் வரவுக்குத் தக வாழத் தெரியாதவர் என்றே நினையுங்கள்!

**“பொருளுக்கும் வறுமைக்கும், புண்ணியமும் பாவமும்**

**காரணம் இல்லை” முயற்சியால் அல்லது முறைகேட்டால் வந்தது செல்வம்** என்கிறார்.

இப்படிச் சொன்னால், செல்வருக்குத் திருவள்ளுவர் **உருவமே படமெடுக்கும் பாம்பாகத் தோன்றாதா? திருவள்ளுவர் பெயரே திடுக்கீட்டை உண்டாக்காதா? திருக்குறளுக்கா பூசை போடுவார்?**

★ ★ ★

7. வணிகர்களே, வணிகர்களே,

“பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை”

“பொருளானாம் எல்லாம்”

“பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும் பொருள்”

“பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்

எண்ணிய தேயத்துச் சென்று”

என்று சொல்லிச் சொல்லித் தேடித் தேடிக் குவியுங்கள்! கொள்ளுவதைக் கொள்ளுமளவு கொள்ளையடியுங்கள்! கொடுக்குமளவு உங்கள் விருப்பம் போல் கொடுங்கள். வணிகத்தில் அறம் பார்க்காதீர்! **அருள் பார்க்காதீர்!** வணிக இலக்கணமே பொருள் கொள்ளை தான்! என்று

திருவள்ளுவர் சொல்லியிருந்தால், வணிகக் குழும்பின் வழிபடு தெய்வமாகவே வள்ளுவர் ஆகியிருப்பார்!

ஆனால் அவரோ, "வணிகம் செய்பவர்களே **வணிகத்தை நேர்மையாகச் செய்யுங்கள்! நிறுக்கும் நிறைகோல் போல் நேராக - நேர்மையாக - கலப்படம், கடத்தல், கரவு இல்லாமல் வணிகம் செய்யுங்கள்!** அளக்கும் கோல் அளவை மாறாமல் அறம் காப்பது போல். அளந்து கொடுங்கள்! கொள்வதும் மிகக் கொள்ளாமல் கொடுப்பதும் குறைபடாமல் எப்பண்டமும் தாருங்கள்! **அப்படிச் செய்தால் உங்கள் வணிகம் ஒருவணிகம் ஆகாமல், இரண்டு வணிகமாம்! ஒன்று பொருள் வணிகம்: மற்றொன்று அறவணிகம்"** என்கிறார்.

"வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோல் செயின்"

என்பது அது.

இதனை எத்தனை வணிகர் ஏற்றுத் **திருவள்ளுவரை நினைந்து, போற்றி யுரைத்து ஒளிவிளக் கேற்றி மணம் பரப்பிக் கடையைத் திறந்து முதற்கண் வழிபாடாகச் செய்வர்? வள்ளுவர் படமாவது வைப்பாரா தம் நிறுவனத்தில் - வீட்டில்!**

★ ★ ★

8. வேதியர்களே வேதியர்களே,

வேள்விக்குமேல் வேள்வி செய்யுங்கள்.

வேள்வியால் தான் வேண்டிய வெல்லாம் கிடைக்கும்? வீடு பேறு வேண்டுமா? மகப்பேறு வேண்டுமா? மழைப் பேறு வேண்டுமா? நோய் நொடி நீங்க வேண்டுமா? **பண்ணிய பாவமெல்லாம் புண்ணியமாகப் பொலிய வேண்டுமா? வேள்வி மேல் வேள்வி செய்யுங்கள்! வேந்தர்களே வேதியர்களுக்கு, மங்கலம், திருமங்கலம், உத்தமதானம், மகாதானம், சதுர் வேதி மங்கலம், திரிவேதி மங்கலம், அகரம்** என ஆற்றங்கரை வளப்பகுதிகளை யெல்லாம் வாரி வாரி வழங்குங்கள். **பொற்பசு** (இரணிய கருப்பம்) **குதிரை வேள்வி**

(அசுவமேத யாகம்) முதலாகப் பலவும் செய்யுங்கள் என்றால் 'முப்பாலைப் போல் எப்பாலும் இல்லை' என்று வேதியர்கள் எக்காள மிட்டிருப்பார்கள்!

ஆனால் அவரோ, "பிறவியோடு வந்து பிறவி முடிவோடு தானும் முடியும் பசி என்னும் தீரா எரி உயிர்களுக்கு எல்லாம் இருக்கிறது. மற்றை மற்றை உயிரிகளுக்கு நீ முன்வந்து பசி எரியைத் தீர்க்காமலும் இயற்கைக் கொடையால் அவையே தீர்த்துக் கொள்ளும்! அப்படித் தீர்த்துக் கொள்ள மாட்டாத வறியவர், அறவர், துறவர், அருளர், புதியர் என வருவார்க்கு விருந்து என்னும் வேள்வியைத் தட்டாமல் தவறாமல் செய்! வீணாக நீயே தீயை மூட்டி ஊட்ட மிக்க உணவுப் பொருள்களையும் விலைமானமிக்க பொருள்களையும் உயிரிகளையும் கொண்டு செய்யும் புலையும் கொலையும் கூடிய தீ வேள்வியைச் செய்யாதே" என்றால், வேதியர் ஏற்பாரா? வேந்தர் ஏற்பாரா?

"பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி"

"இராச சூய யாகம் வேட்ட பெருநற்கிள்ளி"

"பதின் வேள்விப் பல்யானைச் செல்கெழு குட்டுவன்" என்பார் இதனை ஏற்றிருந்தால், இப்பெயர்களை ஏற்றிருப்பார்களா? வேள்விக் குடி என்றே ஊர் தோன்றியிருக்குமா?

"அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர் செகுத் துண்ணாமை நன்று"

என்பதுடன்,

"இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன்"
"பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பார் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்"

என்று கூறினால் திருவள்ளுவரை ஏற்பரா? போற்றுவரா?

★ ★ ★

9. சந்திரகிரகணம் சூரியகிரகணம் என்பவை, மக்களுக்குத் தீமை பயப்பவை; அத் தீமையைப் **பரிகாரம் செய்வதால் நீக்கிவிடலாம்;** அந்த நேரங்களில் இப்படி இப்படி நடந்து கொள்ள வேண்டும்; மந்திரம் சொல்ல வேண்டும்; அதன் பின் நீராடி வழிபாடு செய்து உண்டியலிலும் சூடத்தட்டிலும் காசுபோட வேண்டும் என்று திருவள்ளுவர் சொல்லியிருந்தால், நல்ல பாவப் பரிகாரியாய், காசு பறிக்க வழிகாட்டியாய்க் கொள்ளப்பட்டுச் சோதிடர், அருச்சகர் முதலியோரால் வணங்கவும் பரிகார தெய்வமாய்ப் போற்றவும் பட்டிருப்பார். ஆனால் அவர், பொய்யாக அலர் பரவுதற்கு (பழிச் சொல் பரவுதற்கு) உவமை காட்டி **இது எப்படிப் பொய்க் கட்டுக் கதையோ அதுபோல் தான் என்னையும் என் காதலரையும் ஊரவர் பொய்யாகக் கட்டிச் சொல்லும் பழிச் சொல்** என்று தலைவி சொல்வதாகச் சொல்லி, ஏமாற்றுப் பேர்வழிகள் தலையில் குட்டுப் போடுகிறாரே.

அது!

“கண்டது மன்னும் ஒருநாள் அதுமன்னும்
திங்களைப் பாம்புகொண் டற்று”

என்கிறாரே. அது ‘மன்னும்’ என்பது நிலையாக என்னும் பொருளது. பொய்யிலும் வழி வழி நிலைக்கும் பொய்யைக் கூறுகிறார் என்கிறார்.

இராகு என்பது கருநிழல் படர்வது
கேது என்பது செந்நிழல் படர்வது

படர்ந்த படத்தை உடையது பாம்பு அல்லவா! அது படர்ந்து விரிந்து தீண்டிப் படாப்பாடு படுத்துவது என்று கூறுவது போல், எங்களை ஊர்வாயெல்லாம் தீண்டி நஞ்சைக் கக்கி – நலிவு செய்கின்றன!

அங்கே கரும்பாம்பு செம்பாம்பு தீண்டும் என்பதால், கதிருக்கோ மதிக்கோ மண்ணுக்கோ ஒன்றும் ஆகாமை போல், எங்களுக்கும் இயற்கையாக ஒன்றும் ஆகிவிடாது! நிழல் மறைந்து ஒளிவருவது போல **அலர் மறைந்து எங்களுக்கு மணமே நிகழ உதவும்** என்னும் ‘பொய்ம்மையும் வாய்மை இடத்த’ என்பது போல், நலமாக்கிக் காட்டுவாரைப் **பொய்ப்புனைவர் போற்றுவரா?** போற்றி இசைப்பரா? **உண்மை எவ்வளவோ கசப்பானது இல்லையா?**

திருவள்ளுவர் பெயரால் சோதிடநிலையங்கள் உள்ளன! பொய்மைக்கு வாய்மையாளர் பெயரைச் சூட்டிக் கொண்டது, வள்ளலார் பெயரால் புலால் கடை வைப்பதற்கும், காந்தியார் பெயரால் மதுக்கடை வைப்பதற்கும் இணையல்லவா! இன்னும் ஒருபடி மேலே போய், "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற பெருநாவலரை, **'எங்கள் சாதீ'** எனச் சொல்வதும், வள்ளுவர் எனப்பட்டம் சூட்டிக் கொள்வதுமாம் பெருங்கேடு!

திருவள்ளுவர்,

'காலம் அறிதல்'

'இடம் அறிதல்'

'குறிப்பு அறிதல்'

என்னும் அதிகாரங்களை அருமையாகப் பாடுகிறார். அவற்றில் நல்லகாலம் கெட்டகாலம், அமுத நேரம், நச்சு நேரம், கூற்றுவப் பொழுது (எமகண்டம்) என்று சொல்லியோ, இந்தத் திசை இந்நாளுக்கு ஆகும். ஆகாது என்றும், சூலம் பற்றியோ, பெயர் – நாள் – மீன் – வருங்காலம் – இருப்புநிலை, கீழ்நோக்கு, மேல்நோக்கு என்பவை பற்றியோ கூறியிருந்தால், பக்கம் பக்கமாக நூல் நூலாக எழுதியதுடன், "வள்ளுவச் சோதிடம்" என ஒரு பெரும் பரப்புதலை மேற்கொள்வார் பெருகியிருப்பர்! அச்சகங்கள் பதிப்பகங்கள் வெளியிட்டுப் பணம் கொட்டியிருக்கும். விற்பனை நூல்களில் சமயநூல்கள், சமையல் நூல்கள், சோதிட நூல்கள் தாம் பெருக்கமாம்! அவ்வகையில் இடம் பெற்றிருக்கும் வள்ளுவம்! அவற்றுக் கெல்லாம் 'வாயாப்பு' வைத்த வள்ளுவரைப் பெயர் சொல்லி, குலம் சொல்லிக் கொண்டாலும் கொள்கையால் ஏற்றுப் போற்றுவாரா? புகழ்பரப்பி யாவாரா?

அவர் எதனையும் நம்பாமல், 'உன்னை நம்பு' என்கிறாரே! சோதிடனை நம்பு என்ன வில்லையே! எப்படி அவரைப் போற்றுவர்? சாதிப் பெருமை கொள்ளவே போற்றுவார்!

★ ★ ★

10. மனத்தில் மாசில்லாமையே அறம் என்கிறார் திருவள்ளுவர். பொறாமை, ஆசை, சினம், கொடுஞ்சொல் ஆகியவற்றைக் கொள்ளாமை அறச் சான்று என்கிறார்.

பொறாமைப் படுதலே பொங்கல் விழாவாகக் கொள்பவரும்

ஆசைக் கோர் அளவில்லாமல் ஆலாய்ப் பறப்பாரும்

ஒன்றும் இல்லாமலும் சீன வெடி போல் வெடிக்கும் சினத்தரும்

வாய்க்கு வராத சொல்லைச் சொல்லவே வாய்த்தது வாய்

என்பவரும் 'மனத்துக்கண் மாசில னாதல்' என்பதை ஏற்றுத் தங்கள் நூலாக மதித்து வாழ்வரா?

★ ★ ★

11. நூற்றுக்கு 25 ஆக வட்டி வாங்கு

10 ஆயிரம் தந்து 50 ஆயிரம் தந்ததாக எழுதி வாங்கு. பக்கத்திடம், பார்ப்பவர் இல்லா இடம், நத்தம், புறம்போக்கு இடம் ஆகியவற்றை யெல்லாம் வளைத்துப் போடு! அடியாள்களை வைத்துக் கொண்டு ஊர்ச் சொத்தை அள்ளிப் போட்டுக் கொள் என்றால், அத்தகையர் வள்ளுவத்தை வேதநூலாகப் போற்றி இருப்பர்! அவற்றைச் செய்யாமல்,

"பொய்யாமை பொய்யாமை ஆற்றல் மட்டுமே அறம்!
செய்யக் கூடாதவற்றைச் செய்யாமையே அறம்"

என்றால், பொய்யில் புழுத்தவரும், செய்வன வெல்லாம் சேர அழித்தலும் ஆகியவர்க்கு ஏற்குமா?

★ ★ ★

12. சூதாடியே! சொல்வதைக் கேள்!

வட்டாடியவன் கெட் டொழியாமல் இருப்பானா?

தருமன் சூதால் தானே கெட்டான்

நளன் சூதால் தானே கெட்டான்

சூது ஆடி வரும் சிறு பொருள், மீனைப்பிடிக்கத் தூண்டிலில் கோக்கப்பட்ட புழு என்பதை அறி!

சூதாடி வீட்டை விற்பான்; மனைவியையும் அடைவு வைப்பான். மானம் கெடுவான்; மதி இழப்பான்!

அப்பக்கம் பாராதே என்றால், சூதாடி கேட்பானா?

வாழ்வு நூலெனக் கொள்வானா?

★ ★ ★

13. சூதாட்டம் தானே, குதிரைப் பந்தயம்!

சூதாட்டம் தானே, பரிசுச் சீட்டு!

சூதாட்டம் தானே, ஒன்றெடுத்தால் ஒன்று இலவசம் என்பது!

சூதாட்டம் தானே, இரண்டு மனையிடம் வாங்கினால்

ஒரு மனை இலவயம் என்பது!

சூதாட்டம் தானே, உலக விளையாட்டுப் பந்தயம்!

சூதாட்டம் தானே, கள்ள நோட்டு ஒன்றுக்கு இரண்டு தரல்!

இவற்றை விரும்புபவர் திருக்குறளை விரும்புவரா?

"சூதர் என்னும் பழிப்பெயர் ஒன்று எய்தி, நூறு பேறுகளை இழக்கும் பாவியர் சூதர் ஏற்பரா? சுடு தீ என எண்ணாரா?"

★ ★ ★

14. கொல்லாமை அறமே தலைப்பட்ட அறம்;

என்னென்ன அறங்களைச் செய்தாலும் கொலையாளன் கொலையாளனே என்று கூறினால் கொலைகாரன், புலால் கடைக்காரன், அவன் புலாலை வாங்க, உண்ணப் பருந்தாக வட்டமிடும் புலாலுண்ணிகள் போற்றுவார்களா? புத்தம் புது விருந்தென்று ஏற்று நடப்பார்களா?

கடவுள் பெயரைச் சொல்லி – வேள்வியின் பெயரைச் சொல்லி – உடல் வலிமைக்கு ஆம் என மருத்துவர் சொல்லிப் புலாலை உண்டாலும்,

கொலை, கொலையேதான். புலை, புலையேதான்! காரணம் காட்டிக் கொன்ற உயிரை மீள எழுப்ப முடியுமா?

"ஒன்றாக நல்லது கொல்லாமை" என்றவரை உயிர்க் கொலைஞர் ஏற்பரா! ஏற்றாலும் வாயளவில் தானே ஏற்பர்! கொள்வரா கடைப்பிடியாக!

★ ★ ★

15. "குடிகாரா குடி, 'நன்றாகக் குடி,'

"குடி குடியைக் கெடுக்கும் நாட்டையும் கெடுக்கும்" என்று கண்ணில்பட கடையின் வாயிலில் எழுதிப் போட்டிருந்தாலும் கடைவாய் ஒழுகக்குடி! கட்டிய உடை உண்டா இல்லையா என்பதை அறியாத அளவில் குடி! "குடிகாரன் வருகிறான் குடுமியைப் பிடித்து அடிப்பான்" எனக் கொண்ட மனைவியும், பெற்ற தாயும், பிறந்த குழந்தைகளும் அஞ்சி நடுங்கினாலும் மிடாக் குடியனாய் இரு என்றிருந்தால், திருக்குறளை அதற்காகவாவது தொடுவான்! இக்குடி கெடுவான் தொடுவானா திருக்குறளை? குடியால் குடிகளைக் கெடுக்கும் அரசும் ஏற்குமா?

★ ★ ★

16. உழவனே, உழவனே,

நீ இரவாதே!

இரந்து வருவார்க்கு இல்லை என்னாதே!

நீயே உயிர்தரும் உணவுதரும் கொடையாளன்!

நீ கையேந்தி நில்லாதே!

உன் உழைப்பை விட்டால், உலகத்தார் பிழைக்க முடியுமா?

முற்றத் துறந்த துறவியும் வாழ்வானா?

நீயே பிச்சைக்கு நின்றால், பிச்சை எடுப்பவர்க்கு நீ ஈவாயா?

உழைத்த கை இலவயம் வாங்கினால் பின்னர் உழைக்குமா?

துருப்பிடித்த இரும்பு தூணாகத் தாங்குமா?

உழுவார் உலகத் தேர்க்கு அச்சாணி! அது

கழன்று விட்டால் தேர் செல்லுமா?

இரத்தலை விடு! என உன்னை நான்

இரக்கிறேன் என்றால். அவன் தானும் வள்ளுவர்

எம் புகழ் பாடினார் என ஏற்பானா? ஏறிட்டுப் பார்ப்பானா?

ஏர் நடத்தாமலே ஏந்திப்பிழைக்க வரிசை கட்டியவன் அல்லனோ அவன்?

☆ ☆ ☆

17. இல்லறத்தார் சிலர், கேட்கின்றனர்: வள்ளுவரே,

சில துறவிகள் எங்களைப் புழுப்பூச்சிகளைப் போலப் பார்க்கிறார்கள்! அறம் என்றால் துறவறமே! இல்லறம் அறம் அன்று! அன்றியும், வீடு பேறும் அவர்கள் அடைய முடியாது என்கிறார்களே!

"எங்கள் சோற்றை உண்டு, எங்கள் துணியை உடுத்து. எங்கள் உதவியால் வாழ்ந்து எங்களை இப்படி இழிவு படுத்துபவர்களை எண்ணிப் பார்க்கவே எங்களுக்கு அருவறுப்பாக இருக்கிறது. நீர் என்ன சொல்கிறீர்?" என்கிறார்கள், திருவள்ளுவரிடம்.

"நீங்களே இப்படித் தெளிவாக இருக்கும் போது நான் உங்களுக்கு என்ன சொல்ல இருக்கிறது.?"

"ஆனாலும் சொல்கிறேன்" என்று சொல்கிறார் அவர்.

"மணவாத் துறவிகளே, துறவறமே அறம் என்பவர்களே, துறவறக் கடைப்பிடி கொள்ளாமல், துறவறம் கொண்டாலும் ஆணாகப் பிறவாமல் போனால் பெண்ணாகப் பிறந்தால் வீடு பேறு இல்லை. பிறவிச் சுழற்சிக்கு ஆட்பட்டவர்களே என்பவர்களே! உங்களைப் பெற்றவர்கள் இல்லையானால் நீங்கள் பிறந்திருப்பீர்களா? இப்படியெல்லாம் இல்லறத்தையும் பெண்மையையும் பழித்துப் பேச உங்களுக்கு வாய்வருமா? அறிவோ நன்றியோ இருந்தால் இப்படிப்பேசத் துணிவீர்களா?" என்று நீங்கள் கேட்டிருந்தால், வாயை மூடிக் கொண்டு போயிருப்பார்கள்! அப்படியும் வாயை மூடவில்லை என்றால். "இந்தப் பிறவி சிந்தனைப் பிறவி இல்லை; மூடத்தினும் மூடமாம் பிறவி; இது,

**இப்படித்தான் இருக்கும்: இப்படித்தான் பேசும்: இதனிடம் பேச்சுக் கொடுத்ததே தவறு"** என்று நீங்கள் உங்கள் வாயை மூடிக்கொண்டு ஒதுங்கிப் போயிருப்பீர்கள்! அது போகட்டும். நான் சொல்கிறேன்.

"அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை" என்றேனே!

"அறத்தான் வருவதே இன்பம்" என்றேனே!

"துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்

இல் வாழ்வான் என்பான் துணை" என்றேனே.

இல்வாழ்க்கையிலேயே,

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்

தெய்வத்துள் வைக்கப் படும்"

என்றேனே! இவை போதாவா?

"பெண்ணுக்கு வீடு பேறு இல்லை என்று சொன்னதாகச் சொல்கிறீர்களே! அப்படிப் பெண்ணுக்கு வீடுபேறு இல்லை என்றால், ஆணுக்குக் கட்டாயம் கிடையாது! ஆண் **ஒருவன், ஒழுக்கம், அடக்கம், பொறுமை, வாய்மை, தூய்மை, தொண்டு, தன்துயர் தாங்கிப் பிறர்க்கென வாழ்தல் ஆகிய பெண்மைப் பண்புகளை அடையாமல் வீடு பேறு அடையவே முடியாது** என்பதால் தான்,

"பெண்ணில் பெருந்தக்க யாவுள"?

"பெண்ணில் பெருந்தக்க தில்"

"பெண்ணே பெருமை உடைத்து"

என **முப்பாலிலும் கூறினேன்.** இப்படிச் சொல்லியும் கேளாத முரண்டர் – **அறியா முரண்டர் அல்லர்! அறிவறி முரண்டர்!** 'இப்படிச் சொல்ல வேண்டும்' என்றே முடிவு செய்து கொண்டு முழங்கும் முரண்டர். அவர்கள் அப்படித்தான் சொல்வார்கள்! அதைத் துணியில் பட்ட தூசிபோல் தட்டி விட்டு நடையிடுங்கள் என்கிறார் திருவள்ளுவர்.

★ ★ ★

18. திருவள்ளுரே!

செல்வம் மட்டும் இல்லை: உடல் அலுக்காமல் இருந்து கொண்டும் ஏவிக் கொண்டும் வேண்டியவற்றை யெல்லாம் வேண்டியவாறு தட்டாமல் பயன்படுத்திக் கொண்டும் வாழ்பவர்கள் **முற்பிறவியில் நல்லவை செய்தவர்கள் என்றும்,** அவ்வாறு இல்லாமல் உடல் உழைப்புச் செய்தும், ஏவுவதை எடுபிடியாய்ச் செய்து கொண்டும் வேண்டியவை கிடையாமல் ஏங்கிக் கொண்டும் வாழ்பவர்கள் **முற்பிறவியில் அல்லவை** (பாவம்) **செய்தவர்கள் என்றும்,** சிலர், நீர் சொல்லியதாகச் சொல்லி எங்களை ஓடஓட வெருட்டுகின்றனரே! நாங்கள் ஓடாகத் தேய்ந்து, 'ஏன் பிறந்தோம் இந்தத் துயரப்படவா பிறந்தோம்' என்று எங்கள் பிறப்பையே நாங்கள் நொந்து கொள்ளுமாறு செய்கிறார்களே! நீர் இப்படிச் சொன்னீரா? **நீர் இப்படிச் சொல்லியிருக்க மாட்டீரே!** எதைக் கொண்டு சொல்கிறார்கள் என்றனர். திருவள்ளுவர் நகைப்பும் நகைப்போடு கடுப்பும் காட்டிச் சொல்கிறார். **நான் எதை அறம் அன்று என்றேனோ** அதையே அறம் **என்று சொல்லித் தாம் புண்ணியம் செய்தவர்கள் என்று தம்பட்டம் அடித்துக் கொள்வதற்குத் தான் அப்படிச் சொல்கிறார்கள்!** அவர்களுக்குத் தகுந்தால் போல் வாழும் மூளைச் சலவையரும் **என்னையும் என்கருத்தையும் எண்ணாமல் அப்படிச் சொல்கின்றனர்.** நான்,

"அறத்தாறு இது என வேண்டா, சிவிகை

பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை"

என்றதைத் தான் இப்படிப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். நானே,

"மேலிருந்தும் மேலல்லார் மேலல்லார்; கீழிருந்தும்

கீழல்லார் கீழல் லவர்."

என்றும்,

"அறிவினால் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்

தன்னோய்போல் போற்றாக் கடை"

என்றும் **சொல்லியதைத் தெளிவாகப் படித்தும் இப்படிச் சொல்கிறார்கள் என்றால்** என்னைக் காட்டி அவர்கள் தந்நலத்தைக்

காத்துக் கொள்ள அப்படிச் சொல்கிறார்கள். இப்படித் **தெளிவாக என்னிடம் கேட்கும் நீங்களே, உங்களுக்குள் கேட்டிருந்தால்** - என் குறளை முழுமையாகத் திருப்பிப் பார்த்திருந்தால் - தெளிவாகி இருக்குமே! 'நீங்கள் அப்படி எண்ணுகிறீர்கள்; என்னை முழுதுறப் பார்த்து முடிவு செய்கிறீர்கள்' என்பதை அறிந்தாலே, அவர்கள் நாடி ஒடுங்கிப் போகும்! நாவும் ஒடுங்கிப் போகும்! **நல்லவற்றை யெல்லாம் அல்லதாகச் சொன்னால், இனி இவர்களிடம் எடுபடாது** என்று தெளிவு ஏற்பட்டிருக்கும். ஒளிவருகிறது என்றால் இருள் தானே மறைந்து போய்விடும் அல்லவா என்றார்.

★ ★ ★

19. திருவள்ளுவரே,

திருமால், வாமனன் என்னும் பெயரில் ஒரு குள்ள வடிவாக வந்தான். சேரலப் பகுதியில் **மாவலி** என்னும் **தமிழ்மன்னன்** ஆட்சி புரிந்தான். அவன் பெருவள்ளல். அவனை அணுகினான் வாமனன். யான் வேள்வி செய்ய வேண்டும். அதற்குப் பெரிதளவு இடம் வேண்டா. என் காலால் அளக்கும் மூன்றடி அளவு இடம் போதும் என்றான். வள்ளல் மாவலி 'அப்படியே தந்தேன்' என்றான். மாவலியின் அமைச்சன் **சுக்கிரன்,** "இவன் திருமால். குள்ள வடிவில் உன்னை வஞ்சிக்க வந்துள்ளான். கொடாதே" என்று தடுத்தான். ஆனால், "கொடுத்தேன் என்ற சொல்லை என்னால் மாற்ற இயலாது; கொடுத்தது கொடுத்ததுதான்" என்றான் மாவலி!

கொடுத்த சான்றாக நீர்வார்த்துத் தரச் சொன்னான் வாமனன். 'நீர் வார்க்க வேண்டா' என்றும் தடுத்தான் சுக்கிரன். ஆயினும் 'சொன்ன சொல்லை மாற்றி என்னை நன்றி கொன்ற கொடியோன் ஆக்காதே' என அவனை ஏசி, வாமனனுக்கு நீர்வார்த்தான் மாவலி.

வாமனன் நிமிர்ந்தான்! நெடுமாலாய்! ஓரடியால் மண்ணை அளந்தான்; மற்றோரடியால் விண்ணை அளந்தான். மூன்றாம் அடிவைக்க இடமில்லை. ஆதலால், மாவலி தலைமேல் காலை வைத்துப் பாதலத்து அழுத்தினான்! அவன் 'பகவான் பரப்பிரம்மம்' என்று பெருமையாகக் கதை பேசப்படுகிறது என்றனர். இக்கதை நானும்

கேட்டதுதான்! "இது என்ன நம்பத்தகு கதையா? கொடுத்தவனையே அழித்த கொடுமைக் கதை! வேள்வியாம்! அடியளந்தானாம்! உலகம் அனைத்தையும் கொண்டானாம். சோம்பல் **இல்லா மன்னவன் முயன்றால் உலகனைத்தும் ஒரு குடைக்கீழ்க் கொண்டுவந்து விடலாமே; இதற்கென்ன புனைகதை!"** வேண்டும் என்றார். இதனை மாலியர் ஏற்பரா? அவர்க்குத் தக வள்ளுவப் பொருளை மறைக்கும் வகையால் மறைத்து, மாலின் பெருமையை வள்ளுவர் சொன்னார் என்றனர், வள்ளுவர் மாலியரே என்றும் கூறினார். அப்படியானால் முதலாழ்வார் மூவர்க்கும் முதலாழ்வாராக அல்லவோ வள்ளுவர் சொல்லப்பட்டிருக்க வேண்டும்! அவர் படத்திற்கு இராமம் (நாமம்) போட்டதால் மாலியராய் விடுவாரா?

**"பழித்ததையும் மாற்றிப் புகழாக ஏற்றல் வேதிய வழக்கு"** என்பதைக் காட்டிய இக் கதையைக் கம்பர்,

"எடுத்தொருவருக் கொருவர் ஈவதனின் முன்னே
தடுப்பது நினக்கிது அழகோ தகவில் வெள்ளி
கொடுப்ப தழுக்கறுக்கும் கொடியோய்! உன் சுற்றம்,
உடுப்பதூஉம் உண்பதூஉம் இன்றிக் கெடுகின்றாய்"

எனப் பாடினார்.

"கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும்"

என்னும் குறளைக் கொண்டு அதன் விளக்கமாகப் பாடியது இது. ஆனால், யான்,

"மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்
தாஅய தெல்லாம் ஒருங்கு"

என்று பாடியதன் பொருள் என்ன?

"சோம்பல் இல்லாத வீறுமிக்க வேந்தன், முயற்சியால் உலகையெல்லாம் கையகப் படுத்த முடியுமே! இதற்குத் தன் அடியால்

உலகையெல்லாம் அளந்தான் என்னும் கற்பனைப் படைப்பு என்ன வேண்டிக் கிடக்கிறது! என்று தானே சொன்னேன்" என்றார்.

குறிப்பு:

குட்டி நாடாம் இங்கிலாந்து, கதிரோன் மறைவு என்பது எப்பொழுதும் இல்லாத உலகப் பரப்பெல்லாம் எங்கள் கையதே என்று நிலை நாட்டி விடவில்லையா?

★ ★ ★

20. வள்ளுவரே,

மாலிய அடியார் அடையும் உலகம் மக்களால் வைகுந்தம் வைகுண்டம் எனப்படும் என்கின்றனர். அவ்வுலக இன்பமே இன்பம்! அவ்வின்பத்திற்கு இணையானது எதுவும் இல்லை! மாலின் அடியாராய் வாழும் வாழ்வே வைகுந்தமாம் 'தாமரைக் கண்ணான் உலகை' அடையச் செய்யும் என்கின்றனர்.

அதை நேரே சென்று கண்டு வந்தவர் போலவும் பரப்புகின்றனர் என்றனர். திருவள்ளுவர், என் செவிக்கும் இச் செய்தி எய்தியது. அதனை ஏற்றேன் அல்லேன்! ஏனெனில்,

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்

மெய்ப்பொருள் காண்ப தறிவு" என்றும் கூறினேனே!

பிறப்பென்பது அறியாமை அல்லது பேதைமை! அது நீங்க வேண்டுமெனின் செம் பொருளாம் மெய்ப்பொருள் காண்பதே அறிவு என்றும் தெளிவித்தேனே!

அளவிட்டுக் கூற முடியாமல் பெருகும் ஆசை நீங்கினால் அறவே இல்லாமல் அற்றுப் போய் ஐந்தவித்தால் - ஒடுங்கினால் - அதுவே **வீடுபேறாம் பேரா இயற்கை! அது வன்றி வேறு வீடு பேறு இல்லை** என்று தேர்ந்துரைத்தேனே!

"ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே

பேரா இயற்கை தரும்" என்றேனே!

மெய்யாய இன்பத்தைக் கண்டு.

"தாம்வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு"

என்று விளக்கியுமா இப் பரப்புதல்?

"தாம் உயிருக்கு உயிராய் ஒன்றிய இன்ப அன்புடைய தலைவனும் தலைவியும் தழுவி இன்புறும் ஈடிலா இன்பத்திற்கு இணையாகுமோ தாமரைக் கண்ணான் உலகத்து அடையலாம் என்னும் இன்பம்?" என்றது புரியவில்லையா? கையில் உள்ள கனியை எறிந்து விட்டுக் காணாத- காட்ட இயலாத – கற்பனைக் கனியை – இணையில்லா இன்பச் சுவையது என்பது பொருந்துவதா? "மென்தோள் துயிலின் இனிது கொல் – இனிதாகுமோ – தாமரைக் கண்ணான் உலகு போய்ப் பெறும் இன்பம்" என்று ஐயவினாத் தொடுத்தேனே 'கொல்' என்பது ஐயப் பொருளது என்பது தமிழறிந்தார் அறிந்ததே யல்லவோ!

'கொல்லே ஐயம்'

என்பது தொல்காப்பியம்! இதே ஐயத்தை,

"அணங்கு கொல் ஆய்மயில் கொல்லோ கணங்குழை
மாதர் கொல் மாலுமென் நெஞ்சு"

என்று காமத்துப் பால் முதல் அதிகார முதற் பாடலிலேயே நலம் புனைந்துரைத்தலாகக் கூறியதை நீங்கள் எண்ணலாமே!

ஒரு 'கொல்' என்னாமல் மூன்று 'கொல்' போட்டு ஐயத்தை மெய்ப்பிக்கும் சான்று அஃதாம்! என்றார்.

குறிப்பு:

"வைகுந்த வாசகா! தாமரைக் கண்ணா, உன்னுலகைப் பெறுவதே பொன்னுலகப் பேறாம்! மற்றவையாம் பேறுகள் என்ன பேறாம்?" என்று அவர் ஏற்றுப் போற்றியிருந்தால், மாலியக் கோயிலில் திருச்சிலையாக நாமத்தோடு (இராமத் தோடு) இருந்து பொலியப் பொலியக் காட்சி தந்து பொன்னூசல் ஆடிக் கொண்டு இருப்பாரோ வள்ளுவர்!

★ ★ ★

21. திருவள்ளுவரே,

"இலர்பலர் ஆகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்"

என்னும் குறளைக் காட்டி வறுமைக்குக் காரணம் தவம் இல்லாமையே என்கின்றனரே! உண்மைதானா அது? என்றனர். திருவள்ளுவர் வினாவுகிறார் அவர்களை:

"அதிகாரப் பெயர் என்ன?"

விடை: 'தவம்'

"அதிகாரப் பெயரை முதலாவதாக வைத்துத்,

(தவம்) "இலர்பலர் ஆகிய காரணம் நோற்பார்

சிலர்பலர் நோலா தலர்"

எனப் பொருள் பாருங்கள்! தானே விளங்குமே!

உறுதிப்பாடுடையவர் சிலர்: ஆதலால், தவமுடையாரும் சிலர்

உறுதிப்பாடு இல்லார் பலர்: ஆதலால், தவமிலாரும் பலர்

என்பது புலப்பட வில்லையா? என்கிறார்.

★ ★ ★

22. திருவள்ளுவரே,

தவம் செய்ததன் பேறே அறிவிலானையும் அள்ளிக் கொடுக்க வைக்கும் என்று நீர் சொன்னதாகக் கூறுகின்றனரே! சரிதானா? அறிவிலாக் கருமியும் தவவேடத்தைக் கண்டே –

போலி வேடத்தைக் கண்டே தருவான் – அதைக் கொண்டு

அவன் **மெய்யான தவத்தவன் என்றோ,** அவன்

மெய்யான கொடையாளன் என்றோ எண்ணாதே

என்று நான் கூறியதைப் **புரட்டிய புரட்டே,** அப் பொருளாம்.

அறிவிலான் நெஞ்சுவந் தீதல் பிறிதியாதும்

இல்லை பெறுவான் தவம்

என்பது குறட்பா! பெறுவான் தவம் = பொருளைப் பெறுபவன் தவக் கோலம் – உடை – சடை – பூச்சு – பேச்சு முதலியன.

★ ★ ★

23. திருவள்ளுவரே,

முற்பிறவியில் தவம் செய்தார்க்கே இப்பிறவியில் தவம் செய்ய முடியும். மற்றவர்கள் முயற்சி பயனற்றது என்கின்றனரே! நாங்கள் என்ன செய்வது?

வள்ளுவர் : "நீங்கள் என்ன செய்கிறீர்கள்?"

விடை : "உழுகிறோம்: தச்சு வேலை, கொல்லு வேலை, நெசவு வேலை, சமைப்பு வேலை எனச் செய்கிறோம்."

வள்ளுவர் : "இவற்றைச் செய்ய வேண்டும் முறையில் செய்கிறீர்களா? சரியாகச் செய்கிறீர்களா?"

விடை : "ஆம்! செம்மையாகச் செய்கிறோம்"

வள்ளுவர் : "நான் என்ன சொல்வேன்? **நீங்கள் தவம் செய்து கொண்டே தவம் செய்யவில்லை என்று எண்ணும் அறியாமையைக் கண்டு தான் திகைக்கிறேன்** நான்!"

**"தவம் செய்வார் தம் கருமம் செய்வார்"**

என்று தானே நான் சொன்னேன்.

**"உங்கள் கடமையை ஒழுங்காகச் செய்யும் நீங்கள் தவம் செய்பவர்களே! வேறு தவம் இல்லையே! என்றார்".**

★ ★ ★

24. திருவள்ளுவரே,

"தவம் செய்பவர்களுக்கு உடை, சடை, தாடி, மழிப்பு என ஏதாவது கோலம் வேண்டுமா?" (கோலம் – வேடம்)

விடை : "தவம், கோலத்தில் அல்லது வேடத்தில் இல்லை! உங்களுக்கு வரும் துன்பத்தைத் தாங்கிப் பிற உயிர்க்குத் துன்பம் செய்யா திருக்கும் உறுதியே தவமாம்! இவ்வுறுதி உடையவரானால் தவக் கோலம் கொண்டாலும் கொள்ளா விட்டாலும் அவர்செயல் தவமேயாம். இவ்வுறுதி இல்லாதார் தவக் கோலம் கொண்டாலும் அஃது அவக் கோலமேயாம். இதனை நீங்கள்,

"உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு"

"தவமும் தவமுடையார்க்கு ஆகும் அவமதனை
அஃதிலார் மேற்கொள் வது"

என்று குறளில் உள்ளதை அறிவீர்கள் அல்லவா! வேறென்ன விளக்கம் வேண்டும்?

★ ★ ★

25. திருவள்ளுவரே,

நீர் ஊழ் என்றதை ஊழ்வினை (தலைவிதி) என்கின்றனரே! அதன் பொருள் அதுதானா?

ஊழ் என்பது ஊழ்வினை என நான் எங்கேயாவது சொல்லியுள்ளேனா? ஊழ்க்கும், (மலரும்) ஊழி (முதற்பொருளாம் காலம்) என்று சொல்லியுள்ளேன், தொல்காப்பியர், சங்கச்சான்றோர் ஆகிய எவரும் ஊழ்வினை எனச் சொன்னார் அல்லர்.

ஊழ் என்பதற்குப் பொருள் 'உலகத்து இயற்கை' என்பதை யான் வெளிப்படக் கூறியுள்ளேன். இயற்கை, பேரா இயற்கை உலகத்து இயற்கை எனக் கூறிய தல்லாமல் தலைவிதி எனப் பொருள் கூறவில்லையே!

ஐம்பூதங்களின் இயற்கை மாறுகிறதா? ஆக்கமும் கேடும் பூதங்களின் இயற்கை அல்லவா. இதனை 'இருவேறு உலகத்தியற்கை' என்றேன் அல்லவோ? ஆகூழ், போகூழ் என்றும் விளக்கினேனே! பொதுமக்களைக் காட்டிலும் ஆட்சி நடத்துபவர் ஊழியல்பை அறிந்து ஆட்சி நடத்த வேண்டும் என்பதைச்,

"செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்
தியற்கை அறிந்து செயல்"

என்றேன் அல்லவா!

எந்தக் காற்று இல்லாமல் உயிர்வாழ முடியாதோ, அந்தக் காற்றே கூற்றாகி விடவில்லையா?

எந்த நிலமே இல்லாமல் நாம் நிலையாக நிற்க முடியாதோ, அந்த நிலமே நடுங்கி நாடு நாடாய்க் காவு வாங்கவில்லையா?

எந்த நீர் இல்லாமல் வாழ முடியாதோ, அந்த நீரே ஆழிப் பேரலையாய், சுழலாய் அழிமானம் செய்யவில்லையா?

வெயிலைக் குடையாலும் மிதியடியாலும் வெல்கிறோம்! இது, ஊழை வெல்லல்!

ஓடும் நீரைத் தேக்குகிறோம்: மேல் நிலைத் தொட்டிக்கு ஏற்றுகிறோம்; இவை ஊழை வெல்வது இல்லையா?

ஆனால், குடையே காற்றால் பறந்தால், நீரே அணையை உடைத்தால் – ஊழ்வென்று விடுதல் அல்லவா;

இரண்டும் உலகத் தியற்கை ஆதலால்,

"ஊழில் பெருவலி யாவுள" என்றும்

"ஊழையும் உப்பக்கம் காண்பர்" என்றும்

கூறியதை அறிந்தேனும் தெளிவு பெறலாமே என்கிறார். ஊழ்வினை என்பது பின்னவர் புனைவு என்பதைத் தெளியச் செய்கிறார் திருவள்ளுவர்.

★ ★ ★

26. திருவள்ளுவரே,

நீர் கடவுளை ஒழியட்டும் என்று வசை கூறியதாகக் கூறுகிறார்களே! அப்படிக் கூறினீரா?

அப்படிக் கூறியிருந்தால் கடவுள் வாழ்த்துப் பாடி இருப்பேனா? கடவுள் ஒழியட்டும் என்று எங்கே கூறினேன்?

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்."

என்று யான் அரசுக்குக் கூறியதை விளங்கிக் கொள்ளாமல் உரைகண்டவர் குற்றம் இஃதாம்

இயற்றுதல் என்பது படைத்தல் இல்லை.

நூலியற்றுதல், சட்டம் இயற்றுதல் என்பதே மரபு. பிச்சை எடுத்தும் மக்கள் வாழ வேண்டும் என்னும் முறையை அரசு உண்டாக்கினால் - உரிய சட்டம் இயற்றாமலும் இரந்து வாழுமாறு வறுமையில் விட்டால் - அவ்வரசு ஒழியட்டும் என்றே கூறினேன்.

கடவுள் வாழ்த்தில் எதிலாவது கடவுள் பெயராக 'இயற்றியான்' என நான் சொன்னேனா?

"இயற்றலும், ஈட்டலும், காத்தலும், காத்த வகுத்தலும் வல்ல தரசு" என்று அரசியலில் அல்லவோ கூறினேன்!

உரை கண்டார் குறை என் குறை ஆகுமா?

இனி, "வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது"

என்பதில் வரும் 'வகுத்தானும்' ஆள்வோனே என்பதை 'இயற்றலும்' என்னும் பாடலிலேயே கூறி இருந்தும், அதற்கும் கடவுளை உரைகாரர் கண்டால் என் குற்றமாகுமா? நீங்கள் குறளை முழுதுற ஓதி முடிவு செய்தால் இப்படி ஐயமும் மாறுபாடும் ஏற்படாது என்கிறார் திருவள்ளுவர்.

★ ★ ★

27. திருவள்ளுவரே,

பிறப்புப் பற்றிய உம் கருத்து என்ன?

கண்காணப் பிறக்கும் பிறப்பைப் பற்றியே நான் கூறினேன். முற் பிறப்பு, பிற் பிறப்பு, ஏழ்பிறப்புப் பற்றிக் கூறவில்லை. எழு பிறப்புப் பற்றிக் கூறியது, தோன்றிய பிறப்பு என்பதாம்.

"எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமம் துடைத்தவர் நட்பு"

என்பதை நினைக!

உள்ளுவர் என்பது நினைப்பவர் அல்லரா? **இறந்தவர் நினைப்பார்** என்பது எப்படி? மெய்ப்பிக்கக் கூடியதா?

முட்டைக்குள் இருக்கும் குஞ்சுக்கு வெளியுலகம் தெரியாதது போல இவ்வுலகில் வாழும் வரை வேறுலகம் பற்றி எவர் அறிவார்?

ஏழு தலை முறை என்பதே பொருள். ஒரு தலை முறையில் செய்த நன்மை, ஏழு தலை முறைக்கும் வரும் என்பதே பொருளாம். கண்கூடான சான்றுகள் நீங்கள் அறியாதனவா? என்றார்.

குறிப்பு :

இனி ஒரு பிறப்பிலேயே ஏழு பிறப்பும் உண்டே. பிள்ளை, குழந்தை, குமரன், காளை, வாலியம், முதியர், பெரு முதியர் என ஆண்பாலுக்கும், பிள்ளை, குழந்தை, குமரி, கன்னி, நங்கை, முதியர், பெரு முதியர் எனப் பெண் பாலுக்கும் கொள்ளலாம் அல்லவோ! இது வள்ளலார் கண்டது.

"சித்தம் திருந்தல் அல்லது செத்துப் பிறத்தல்"

என்பது **திரு.வி.க, வின்** ஒரு நூல். "பிறப்பென்னும் பேதைமை" என்பது வள்ளுவம்.

★ ★ ★

28. திருவள்ளுவரே,

வினைபற்றிய உம் கருத்தென்ன?

வினை என்பது தொழில், செயல் என்பவை தாமே.

நல்வினை – நற்செயல்; தீ வினை – தீச் செயல்.

நல்லது பிறர்க்குச் செய்தால். நமக்கும் நல்லது வரும்.

தீயது பிறர்க்குச் செய்தால் அத்தீயது நமக்கும் வரும்.

போட்ட வித்து முளைப்பது போல் செய்த வினைக்கு விளைவும் அதுவாம்.

ஒரு செயலின் பயன் அப்போதைக்கு அப்போதே உண்டாவது உண்டு. சற்றே காலம் கடந்து உண்டாவதும் உண்டு.

பொய் கூறினால், 'பொய்யன்' என்பது உடனே பெயராகி விடுகின்றதே.

களவு செய்தால், கொலை புரிந்தால் வெளிப்படாமலா போய்விடும்? அன்றில்லை என்றாலும் துப்புத் துலக்கித் தண்டனை பெறுகிறார்கள் அல்லவா! யான் தெளிவாகக் கூறினேனே.

"பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்"

என்று. உடனுக்குடன் அல்லவா வினைப்பயன் வரும் என்பது, மறுபிறப்பிலா, கொலையாளிக்குத் தண்டனை தருகிறது அரசுச் சட்டம்?

தந்தை செய்த குற்றத்திற்குத் தந்தையை விட்டுவிட்டு மகனுக்கா தண்டனை தரும் நீதிமன்றம்? குற்ற வழக்கைக் கூர்ந்து பாருங்கள்; உங்களுக்கே புலப்படும்.

"பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்"

என்பதை எண்ணினால் காலம் தள்ளியும் பிறப்புத் தள்ளியும் வினைப்பயன் வரும் என்று எண்ண வருமா? என்கிறார்.

தீமைக்குத் தண்டனை கட்டாயம் உண்டு என்பதைத்

"தீயவை செய்தார், கெடுதல் நிழல்தன்னை
வீயாது அடியுறைந் தற்று"

என்பது கொண்டும் தெளியலாமே என மேலும் எடுத்துக் காட்டினார்.

★ ★ ★

## 29. யானே ஆண்டவன்

"மக்களே மக்களே, உங்கள் இறைவன் யானே! யானே உங்களைப் படைத்தேன்"

என்னை நினைக்கவும் ஓதவும் தொண்டு செய்யவும் உலகெலாம் பரப்பவுமே உங்களைப் படைத்தேன்.

நீங்கள் நம்ப வேண்டுமானால் என்னையே நம்புங்கள்! என்னைத் தவிரக் கடவுள் வேறு இல்லை!

மயங்காதீர்கள்! தயங்காதீர்கள்! மாற்றுவழி தேடாதீர்கள்!

நானே உங்கள், பண்பு, செயல்களுக்கு ஏற்ற வகையில் உயர்பிறப்பு, தாழ்பிறப்பு எனப் படைத்தேன். என்னை நம்புவோர் – சிந்திக்காமல் ஏன் என்று கேட்காமல் நம்புவோர் – **உயர் பிறப்பர்.**

என் சொல்லுக்குச் செவிசாயாராய் – ஐயப்படுவோராய் – இருப்போர் **இழிபிறப்பர்!**

நானே படைத்தேன்! நானே காத்தேன்! நானே அழிப்பேன்! நானே தெய்வநிலையும் வீடு பேறும் வழங்குவேன்!

நீங்கள் தேடி அடைய வேண்டிய ஒரே பொருள் நானே! என்னை அடைந்தால் எல்லாம் அடைவீர்கள் என்றிருந்தால், அவர் கடவுளாய் ஆக்கப் பட்டிருப்பார்! அதனை அவர் செய்ய வில்லை! மக்கள் ஏறிட்டுப் பார்க்க வில்லை!

★ ★ ★

## 30. யானே கடவுள் வழிஞன்

திருவள்ளுவர் கடவுள் தோற்றரவு! கடவுளே நேரில் வந்து மாந்தர் உய்வதற்காகத் திருக்குறள் ஓதிய திருப்பிறப்பர்!

அந்நூலைப் படித்தாலும் சரி, பக்கம் நின்று கேட்டாலும் சரி, நினைத்தாலும் சரி, நினைத்ததைப் பரப்பினாலும் சரி, வேறு ஒன்றும் இல்லையானாலும் எழும்போதும், உறங்கச் செல்லும் போதும் அவர் பெயரைச் சொன்னாலும் சரி, எல்லாப் பேறுகளும் எய்தலாம். தம்மை நினைவார் எவர்க்கும் எக்குறையும் வாராமல் எல்லா நலங்களும் நினைத்த அளவில் வருமாறே அவர் கடவுளாகப் பிறந்து கடையரும் கடைத்தேற வழிகாட்டினார் என்று வீடு வீடாக, தெருத்தெருவாக, ஊர் ஊராக, நாடு நாடாகப் பரப்பும் **தொண்டர்களை அடியவர்களை, அவர் காலத்திற்குப்பின் எவரேனும் ஒருவர் இருந்து பரப்பியிருந்தால்,** திருவள்ளுவர் கடவுளாகப் போற்றப் பட்டிருப்பார். அதனைத் தமிழர் செய்தார் அல்லர்! அதனால் பொதுமக்கள் அவர்

நூலைத் தொட்டார் அல்லர். தொட்டவரும் கற்றவரும் பரப்பினார் அல்லர்! ஊர் ஊர்க்குச் சிலை எடுத்தார் அல்லர்! அவர் முடம் நீக்குகிறார்; மூடம் நீக்குகிறார்; பார்வை அருள்கிறார்; செவிடர், கேட்க வைக்கிறார்; கேட்ட பொருளைக் கையைக் காட்டிய அளவில் வருவித்துக் கொடுக்கிறார். அவரை வழிபடும் எவரும் கடவுள் மக்களாகத் திகழ்வார்கள் என்று பரப்பும் தொண்டர் - அடியார் - (பற்றர்) பக்தர் - கூட்டம் உருவாக்கப் படவில்லை! அதனால் மக்களிடம் பரவ வழி ஏற்படவில்லை.

★ ★ ★

## 31. அரசின் புறக்கணிப்பு

புலவர்கள், வள்ளல்களையும் அரசர்களையும் பாடு புகழால் மகிழ்வித்து அவர்கள் கொடையால் வாழ்வு நடத்துதலை மேற்கொண்டனர்.

தமிழை உயிர்வாழச் செய்து கொண்டும் வளர்த்துக் கொண்டும் வந்த பெருமக்கள் அவர்களே!

அவர்கள் பாடல்கள் இல்லையேல் தமிழ் வரலாறு, தமிழர் வரலாறு, ஆட்சியர் வரலாறு, பண்பாட்டு வரலாறு, நாகரிக மேம்பாட்டு வரலாறு, மெய்யியல் சீர்மை என்பவை எவற்றையும் நாம் அடைந்திருக்க முடியாது. ஆதலால், அவர்கள் இரவலர்களாகவும் அவர்களுக்குப் புரவலர்களாக வள்ளல்களும் இருந்தமையே நம் பெருமைக்கு மூலம்! அவர்கள் அவையம் ஏற்படுத்தல், நூல் அரங்கேற்றம் செய்தல் என்பனவும் பாராட்டத்தக்கனவே.

ஆனால் வள்ளுவர் எந்த அரசனையும் எந்த வள்ளலையும் பாடினார் அல்லர். **ஏலேலசிங்கன்** என்பார் வள்ளுவரைப் போற்றியவர் என்பதும் பின்னைக் கதையே! வள்ளுவரைப் பற்றிய புனைகதைகளைப் பெருமையாக எண்ணிப் படைத்துச் சிறுமைப் படுத்தியவை. பத்தொன்பது இருபதாம் நூற்றாண்டுகளில் இட்டுக் கட்டப்பட்டவை.

வள்ளுவர் தமக்குப் புரவலரென எவரையும் கொண்டார் அல்லர். நூலில் பாராட்டிப் பாடினார் அல்லர். அரசர்களும் சமயத்தரும் வேதியர் வழி அடிமைப்பட்டு நாட்டை அடைவு வைத்தனரே அன்றி, வள்ளுவரைக் கண்டு கொள்ளவில்லை. கற்ற புலவர்கள் வழிவழியே போற்றினர். பொது

மக்களுக்கு விழிப்பு ஏற்பட்டு அவர்கள் கையில் திருக்குறள் புகுந்த பின்னரே, அதன் பரப்புதலும் சிறப்பும் கிளரலாயின.

★ ★ ★

## 32. கற்றவர் ஏற்றல்

திருவள்ளுவம் தோன்றிய நாள் முதல், அவர் நூலைக் கற்றவர் என்பார் கற்காமல் விட்டனர் இல்லை. அவர் குறளை - குறளின் பொருளை - எடுத்தாளாமல் இல்லை.

திருக்குறளுக்கு விரிவுரை போலப் பாடினார் இல்லாமல் இல்லை! திருவள்ளுவமாலை போல வேறெந்த நூலுக்கும் புகழ்நூல் தோன்றவில்லை! அதுவும் பிற்காலப் புனைவுகளுடன் கூடியதே. திருக்குறளுக்குத் தோன்றிய விளக்க உரைகள், ஆய்வுகள், கட்டுரைகள் அமைப்புகள் அளவுக்கு வேறு எந்த நூலுக்கும் அமையவில்லை.

திருக்குறளை அப்படியே கொண்டு கதை-வரலாறு- கூறும் 'முதுமொழி மேல் வைப்புப்' போன்ற நூல்கள் எதற்கும் வாய்க்கவில்லை. திருக்குறளின் சால்பும் பொதுமையும் எச்சமயத்தாரையும் கவராமல் இல்லை.

திருக்குறளைப் போல மொழிபெயர்ப்புப் பெற்ற எப்பொது அறநூலும் உலகில் இல்லை; அதனைக் கேளாத மேடை இல்லை; போற்றாத் தமிழ் இதழ்கள் இல்லை!

மழலை வாயரும், மனப்பாடம், கவனகம் எனக் கொள்ளத் திருக்குறள் போல் வேறு நூல் எதுவும் பயன்பட்டதில்லை. திருவள்ளுவர் பேருந்தில் இடம் பெற்றார்! சிலையாகப் பரப்பப்பட்டார். திருக்குறள் கல்வெட்டாயது. வள்ளுவர் கோட்டம் கோயில் என ஆயின.

ஆயினும் அவர் கடவுளாக - அவர் நூல் வேதமாகப் பொது மக்களால் ஏற்கப்படவில்லை! உண்மையில் அது வாழ்வியல் நூல், வழிகாட்டி நூல் என்பதே சரியானது.

★ ★ ★

## 33. நடை நூல் ஆக்காமை

திருக்குறளுக்கு உரை கண்டார்கள்; விளக்கம் கண்டார்கள்; சிலை எடுத்தார்கள்; ஓவியம் தீட்டினார்கள்; கொண்டாட்டம் கொண்டார்கள்; மேடையில் பயன்படுத்தினார்கள்; பள்ளிப்பாடம் ஆக்கினார்கள்; பரிசுத் திட்டம் வகுத்தார்கள்; விருது வழங்கினார்கள்! இவ்வளவும் செய்தவர்களும் திருக்குறளே வாழ்வியல் நூல், நம் நெறி நூல் எனக் கொள்ளவில்லை. எல்லாம் முழக்கமாக இருந்தன!

"வாழ்க தமிழ்! எங்கும் தமிழ்! எல்லாம் தமிழ்!" என்பவை எப்படி வாய் முழக்கமாக – எழுத்து முழக்கமாக – ஊர்வல முழக்கமாக இருந்தனவோ – இருந்து பயன்படுத்தாமல் ஒழிக்கும் உத்தியாகக் கொள்ளப் பட்டனவோ – அப்படியே திருக்குறளும் கொள்ளப்பட்டது.

"குடியாதே; குடி குடியைக் கெடுக்கும்; நாட்டைக் கெடுக்கும்" என எழுதிப் போட்டுக் கொண்டு, தெருத்தோறும் மதுக் கடையை அரசு திறந்தது என்றால் வள்ளுவ அறச் செயலா?

பரிசுச்சீட்டுத் தொடங்கியது வள்ளுவ ஆக்கமா? புகையிலைப் பொருள்களைப் போதைப் பொருள்களை அறியாரிடமும் புகும் வகையில் செய்தது வள்ளுவ நெறியா? வள்ளுவம் நடைநூல் என ஆள்வோரும் ஆர்வலரும் உரைகண்டோரும் பிறரும் ஆக்காமல் தங்களுக்குப் புகழ் உண்டாக்கும் நூலாகக் கொண்டது, எப்படி அதனை மெய்யாகப் பற்றிக் கொள்ளச் செய்யும்?

சொல்வேறு செயல்வேறு எனப்பட்டாரின் செயல், "கனவினும் இன்னாது" என்பது வள்ளுவம்! உலக உயர்நூலாம் திருக்குறளைத் தமிழர் ஒழுக்கநெறி நூல் ஆக்காமையே அதன் மெய்ப்பரவுதலுக்குத் தடையாம்!

★ ★ ★

## 34. புகழ்பாடிப் பொருள் சேர்த்தல்

திருக்குறளைக் கற்றார்; மேடைப் பயன் கொண்டார்; திருக்குறளைப் பதித்தார், வணிகப் பொருளாக; திருக்குறள் கவனகம் செய்தார், பொருள்

திரட்டுவதற்காக; திருக்குறள் பெருமையைச் சொன்னார், தாம் பெருமை பெறுவதற்காக!

பட்டிமன்றப் பொருளாயது திருக்குறள்! உயரிய நோக்கொடு தொடங்கப்பட்டது தான்! தொடங்கியவரே நோவுமாறு வெற்றுக் கூச்சலாய் - வேடிக்கைப் பொருளாய் ஆயது! திருக்குறள் மூலப்பதிப்பு வந்தது! முறையோடு வந்தது. மணக்குடவர் முதல் உரையாசிரியர்!

பரிமேலழகர் அவர் முறை வைப்பை மாற்றினார்! அதிகாரப் பெயரை மாற்றவும் துணிந்தார்! பழைய உரையாசிரியர்கள் குறளை அவ்வதிகாரம் கடவாமல் முன்பின் மாற்றி முறைகண்டனர்.

பின்னே வந்தவர்களோ உரைகாணலில் விளையாடினர்! முன்னவர் சமயத்தால் விளையாடினர் என்றால் பின்னவர் கட்சியால் கடவுள் நம்பிக்கை இல்லாமையால் புதுப்புது ஆட்டம் போட்டனர்.

எவரும் செய்யாத செயலைக் குறள் முறை வைப்பைக் கெடுத்தல், மூலத்தைத் திரித்தல் எனக் கொண்டனர் சிலர். திருக்குறளில் தம் கைவரிசை காட்டி, குறள் வரிசை சிதைத்தனர். தம் சிதைப்புக்குக் காரணங்களும் காட்டினர்! திருக்குறள் அகர நிரல் கெடுப்பாயிற்று அது! அதனைப் பாராட்டும் குழுக்களையும் உருவாக்கிக் கொண்டனர். (சமய நூல்களை அப்படி மாற்றி வைக்க எச்சமயத்தாரேனும் ஏற்பரா?) அப்படிச் செய்தாரே பாராட்டும் பணி செய்தாராகப் பறையறையப் பட்டனர்! கட்டமைந்த தமிழெழுத்தைக் கட்டுக் குலைக்கத் துணிவார்க்கும் - இவர்க்கும் என்ன வேறுபாடு?

★ ★ ★

## 35. பொதுமக்கள் அறியாமை

வள்ளுவத்திற்கு அடியார் என ஒரு கூட்டம் அமைக்கவில்லை. அடியார்க்கென ஒரு கோலம் அமைக்கவில்லை. தம் அமைப்புக் கெனக் கொடியோ ஊர்தியோ புனைகதைகளோ அமைக்கவில்லை. ஆனால், "தாம் பெற்ற அறிவு ஆற்றல் மக்களைச் சிந்திக்க வைக்கும்; ஒன்றுபட வைக்கும்; ஒழுக்கமாக வாழ வைக்கும்; எல்லார்க்கும் எல்லாம் என்னும் நிலையை ஆக்கும்."

சமயப் பெயரால், சாதிப் பெயரால், சடங்குப் பெயரால், எவரொருவரும் முட்டல், மோதல், பிரிதல், பிணங்கல் ஆகா;

என்னைப் போல இன்ப துன்ப முடையவர்களே மக்கள் அனைவரும். அவர்கள், துன்பம் நீங்கி இன்புற வேண்டும்!

மக்கள் உருவில் மாறான செயல் புரிபவர் விலங்கு முதலியவற்றின் இயல்புடைய கீழ்மையர் எங்கும் இருக்கவே செய்வர்; அவரும் உணர்ந்து திருந்தி உயர வேண்டும்!

நடிப்பு வேண்டா! கோலம் வேண்டா!

நடைப்படுத்த வேண்டும்; இயல்பான பண்பு நலம் வேண்டும் என்றே திருவள்ளுவர் நூல் செய்தமையால் பொதுமக்களை எட்டவில்லை! இயல்பாகப் பொதுமக்கள் கள்ளம் கரவிலாப் பிறவியர். அவரை அடைய விடாமல் அறிவாளர்கள் தங்களுக்குள் வைத்துக் கொண்டனர். அரசுகளோ செவி சாய்க்கவில்லை! இவற்றை மேற்கொண்டிருந்தால் இப்பாரிய உலகில் வள்ளுவம் போற்றும் கூட்டம் பெரிதாக இருந்திருக்கும்.

★ ★ ★

## 36. குறையா? நிறையா?

"வேண்டுவார் வேண்டுவ எல்லாம் தருவான்"

என்பது முதலாக வள்ளுவர் சொல்லாமை குறையா எனின்,

**"அதுவே வள்ளுவர் நிறை" என்பதாம்.**

மாந்த நேயம் ஆன்மநேயம் இல்லா எதனையும் கூறாமையும், உடல், உள்ளம், செயல் முதலாம் செம்மைகளையும். அறச்சார்பு அன்றி அயற்சார்பு சாராச் சால்புடைமையும், மனத்தில் மாசிலா வாழ்வே வாழ்வு என்றமையும் வள்ளுவத்திற்கே வாய்த்த தனிப்பெருஞ் சிறப்பாம்; இவற்றைப் போற்றி ஒழுகுவார் **எண்ணிக்கை மிகுதியினும், எண்ண மிகுதியே உலக ஆக்கமாம்.**

கல்வியைக் கண் என்றது, அனைவரும் கண் பெற்றமைபோல் கல்வி பெறுதல் வேண்டும் என்று வலியுறுத்துதல் அல்லவா!

அக்கல்வியை அனைவரும் இயல்பாகப் பெறச் செய்தலே **'இறைமாட்சி'** என்பதால் தானே அதனை அடுத்தே வைத்தார்.

அக்கல்வி கற்றாரும் கால மெல்லாம் கற்க வேண்டும் என்பது எதற்காக எனின்,

"எல்லா நாடும் எம்நாடு என்றும்,

எல்லா ஊரும் எம்ஊர் என்றும்

வாழ்வதற்காக" என்றாரே!

"யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு"

என்பது தானே அது.

கல்வியறிவு பெற்றவன் ஆன்ம நேயனாகத் திகழ வேண்டும் என்பதற்காகத் தானே,

"அறிவினால் ஆகுவ துண்டோ பிறிதின் நோய்

தன் நோய்போல் போற்றாக் கடை"

என்றார்.

உலகம் சீராக வாழ்தலே வள்ளுவர் உட்கிடை அன்றிக் கூட்டம் சேர்க்கும் நோக்கில் இயற்றப்பட்டதில்லை திருக்குறள் என்பதை உணரின் அவர்தம் சால்பியம் தெளிவாகத் துலங்கும்.

★ ★ ★

**37.** இதுகால்,

மனிதன் இறைவனுக்காக உரைத்தது திருவாசகம்!

இறைவன் மனிதனுக்காக உரைத்தது கீதை!

மனிதன் மனிதனுக்காக உரைத்தது திருக்குறள்!

என்கின்றனரே! மேடைதோறும் முழங்குகின்றனரே? மூன்றும் தெளிந்து கூறுவனவா?

மனிதன் மனிதனுக்காக உரைத்தது என்பதை ஒப்பாதார் **தெய்வப் புலவர் திருவள்ளுவர்** எனத் திருவள்ளுவரையும் ஆக்கினர்.

மனிதன் தெய்வநிலை அடையலாம் என்பதையும், மனிதனுக்குத் தெய்வமே ஓடிவந்து உதவும் என்பதையும் கூறியவர் அவர்.

பிறர், தெய்வ நிலையர் எனக் கற்பித்துக் கொண்டாரைக் கீழிறக்கம் செய்தனர். எ.கா: “வானின் றிழிந்து”.....

வள்ளுவரோ, மனிதரை மேலேற்றத்திற்கு உந்தி உயர்த்தியவர்! திருவாசகத்தை இறைவனே வந்து எழுதினான் என்பது பின்னவர் புனைவு!

திருவாசகப் பெருமையாகக் கூறப்பட்டது என்பதே அது! சமய வாணர் – மதச்சார்பர் – இவ்வாறு கூறுவதை ஒப்பார்!

இப்படிக் கூறுவார், திருவாசகம் ஓதி ஓதி, உருகி உருகி நின்றாலும் ‘நம்பா மதத்தவர்’ எனவே பழிப்பார்!

கீதையோ தெய்வக் கண்ணன் ஓதினான் எனின், அவன் எழுதித் தந்தானா? வில்லைப் போட்டுவிட்டு மயங்கி நின்ற அருச்சுனன் எழுதினானா?

எங்கிருந்தோ அதனைக் கேட்ட சஞ்சயன் எழுதினானா? ஒலிப்பதிவுக் கருவி கொண்டு பதிவு செய்து படி எடுத்தனரா?

சஞ்சயன் கேட்டுச் சொன்னதைப் பார்வைப் புலன் இல்லாத திருதராட்டிரன் எழுதினானா?

“எழுதியவன் எவன்?” எனக் கூற, அந்தக் கண்ணனே வந்தால் தான் உண்டு? எவனோ எழுதி எவன் மேலோ கட்டி விட்டுப் ‘பகவான் கண்ணன்’ ஆக்கிவிட்டான்! கண்ணன் திருவிளையாடல் கதைகளுக்கும் கீதைக்கும் எள்ளத்தனையாவது தொடர்புண்டா?

பிறப்பொக்கும் என்பது மானிட மெய்ம்மையாகியும், **“வருணப் பிரிவு கடவுள் செய்தார்”** என்பது கடவுள் தன்மையா? கீதையில் உள்ள நல்லதையும் அல்லதாக்கி விடுகின்றனவே, இப்பொய்ப்புனைவுகள்!

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்பதல்லவா அறநெறி ஆய்வுச் சமன்மைச் சீர்மை.

★ ★ ★

38. பெண்ணின் பெருமை பேசுகின்றவர் திருவள்ளுவர் என்பதைத் தெளிவாகத் தெரிந்தும், பெண்ணைப் பழிப்பவர் திருவள்ளுவர் எனக் கற்ற மகளிரே எழுதுகின்றனர்; பேசுகின்றனர். ஏன்?

கட்டுப்பாடில்லாத ஆடவரைப் பழிப்பது போலக் கட்டுப்பாடு இல்லாத பெண்களைக் கண்டிக்கவும் செய்கிறார் திருவள்ளுவர். முன்னதை நோக்காமல் பின்னதை நோக்கிக் கூறுபவர் பழி அது! அன்றியும், பின்னதும் **ஆடவரைப் பழிக்கும் பழியே யன்றிப் பெண்டிரைப் பழிப்பது இல்லை** என்பதையும் அவர் உணரார்! 'வரைவு இல் மகளிர்' யார்? வரைவு கட்டுப்பாடு. கட்டுப்பாடு இல்லாமல் காதலுக்கு இல்லாமல் – காசுக்குத் தன்னைத் தரும் பெண்ணையே **'இருமனப் பெண்டிர்' 'பொருட் பெண்டிர்'** என்கிறார். இது தவறா?

அந்தத் தவறும் கெடுப்பான் ஒருவன் இல்லாமல், அவள் கெட்டிருக்க மாட்டாள்! ஆதலால், **ஆடவன் குற்றம் தானே முற்பட்டது!** அதை எண்ணத் தவறுவார் எப்படி வள்ளுவத்தைப் போற்றுவர்?

"ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு"

என்னும் பெறலரும் குறளைக் கண்டும் வள்ளுவர் பெண்ணைப் பழித்தார் என்பார், **பெண்ணின் பெருமையர் ஆகமாட்டார்! ஏனெனில், உண்மை உணரார் உரை உரையாகுமா?**

பெண் சொல் கேட்பானைப் பழிக்கிறாரே! ஒப்புரிமையரா வள்ளுவர் என்பாரும் உளர். அவர்கள் சூது என்னும் ஒதுக்கப்பட வேண்டியவற்றொடு சேர்த்து வைக்கப்பட்ட இடமறியாதவர்! அப்பெண்டிர் மனைவி அல்லர்! இல்லற இயல்பட்டார் அல்லர்! 'வைப்பாட்டி', சின்ன வீடு, பரத்தை என்று இந்நாள் கூறப்படுபவர் என்பது தெளிந்தால் பழி கூறார்.

★ ★ ★

39. அறம், அன்பு, அருள், அடக்கம், ஒழுக்கம், பொறுமை, இன்னா செய்யாமை எனக் கூறியும், ஒப்புரவு, சான்றாண்மை, பண்புடைமை எனக் காட்டியும் தமிழர் மறத்தை (வீரத்தை)த் தளர்த்தி விட்டார் திருவள்ளுவர்! இது **இந்நாள் போராட்ட உலகுக்கு ஏற்குமா** எனச் சிலர் **எழுச்சியாளராகப் பழிக்கத் துணிகின்றனர்.** திருவள்ளுவரை!

திருவள்ளுவர் கூறிய பகைமாட்சி! படைச்செருக்கு படைமாட்சி உட்பகை, பகைத்திறம் தெரிதல் என்பவற்றை அவர்கள் பாராத ஓரப் பார்வையர்!

"விழுப்புண் படாஅத நாளெல்லாம் வழுக்கினுள்
வைக்கும் தன் நாளை எடுத்து"
"கூற்றுடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்
ஆற்ற லதுவே படை"
"உட்பகை அஞ்சித்தற் காக்க உலைவிடத்து
மட்பகையின் மாணத் தெறும்"
"சிறுபடையான் செல்லிடம் சேரின் உறுபடையான்
ஊக்கம் அழிந்து கெடும்"
"தன்துணை இன்றால் பகை இரண்டால் தானொருவன்
இன்துணையாக் கொள்கவற்றின் ஒன்று"

என்னும் குறள்களையும் அமைச்சு, ஒற்று, தூது, அரண் என்பவற்றையும் படித்துப் பேசுவார் அல்லர் அவர். குடும்ப வாழ்வுக்கும் நாட்டு நலவாழ்வுக்கும், முன்னதும் பின்னதும் கட்டாயம் தேவையானவை என்பதை உணர்ந்தால் இவ்வாறு எண்ணமே தோன்றியிராது.

★ ★ ★

40. திருவள்ளுவரே கற்புடைய மகளிர் மழை பெய் என்றால் பெய்யும் என்றது பொருந்துமா? என்கின்றனர்; அவர் பகுத்தறிவாளரும் கூட!

வள்ளுவர்! "நான் அப்படி எங்கே சொன்னேன்?"

"தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

என்று உவமையாகக் கூறியதை எண்ணாமல், மாறுபொருள் கண்டவர் உரையைக் கூறுகிறீர்கள்! "பெய்யெனப் பெய்யும் மழை" போன்றவள் என்று நான் கூறியதை அறிந்தால் அப்படி உரை கூறியிரார். அவர் அப்படி உரை கூறினாலும் படிப்பவர் ஒப்புக் கொண்டிரார்.

காமத்துப்பாலில்,

"வாழ்வார்க்கு வானம் **பயந்தற்றால்** வீழ்வார்க்கு
வீழ்வார் அளிக்கும் அளி"

என்று கூறியதில், வானம் பயந்தற்றால் – பயந்தது (மழை பெய்தது) போல என்றதை அறிந்தால் தெளிவாகுமே!

வாழ்வார் யார் என வினவின், அதற்கு விடையும்,

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்"

என்றும் விளக்கம் தந்தேனே! எல்லார்க்கும் மழை நீர் வேண்டியதே எனினும் உழவர்க்குத் தொழில் செய்ய வான்மழை இல்லாமல் தீராதே! அதனால் அவரைச் சிறப்பாகச் சுட்டிக் காட்டினேன் என்கிறார். இவ்வாறு வருவன பிறவும் உள எனினும் இவ்வளவு சாலும் என அமைவாம்!

வள்ளுவத்தை ஆய்க! வாழ்வியல் நூலாக்க ஆய்க!

தமிழர் நெறி, நூலளவில் காணப் படலால் பயனில்லை!

தமிழர் வாழ்வைப் பார்! அவ்வுயர் வாழ்வு

"தமிழ்க்குறள் வழி வாழ்வு" என்று மாறுபட்டாரும்

மதித்துக் கூறுமாறு வாழ்வியலாக்கும் கடமையே

நம்மவர் தலைமையாம் கடமையாம்!

வாழிய நலனே! வாழிய நிலனே!

★ ★ ★

**இணைப்பு :**

உயர்வு மிக்க திருக்குறள் அதன் உயர்வுக்குத் தக்கவாறு பரவாமை ஏன்? என ஒருவர் வினவினார்! அதனால் எழுந்த சுவடி இது. இதன் சுருக்கக் குறிப்பு.

1. திருக்குறள், கடவுளோ கடவுள் தூதரோ தந்த நூலாகச் சொல்லப்படவில்லை.
2. திருக்குறள், சமய நூல் எனப்படவில்லை.
3. திருக்குறள், பரப்பும் அடியார் கூட்டமும் அமைப்பும் ஏற்படுத்தப்பட வில்லை.
4. திருக்குறளைக் கற்றால் இன்ன இன்ன பேறு கிட்டும் என்றும், படிக்கா விட்டால் கிடையா என்றும் கூறவில்லை.
5. திருக்குறளில் கதையோ கண்மூடித் தனமோ இடம் பெறவில்லை
6. திருக்குறளில் வழுவாய்க்குக் கழுவாய் கூறப்படவில்லை.
7. திருக்குறள், பகுத்தறிந்து எதனையும் பார்க்கக் கூறியது.
8. திருக்குறள், மன்னரைப் பாடவில்லை. ஆதலால், ஆள்வோர் பற்றினர் அல்லர். அவர்களைச் சமயங்கள் இறுக்கமாகப் பற்றிக் கொண்டன.
9. திருக்குறள், புலமையாளர்களால் போற்றப்பட்டது. பொதுமக்களை எட்டவில்லை.
10. திருக்குறள், பகுதிகள் சில போலித் துறவியர் பற்றத்தக்கதாக இல்லை; அவர்களைக் கண்டிக்கவும் செய்தது.
11. திருக்குறள், பகுதிகள் சில மக்களுக்கு ஆகாதவை – பற்ற முடியாதவை எனத் தோன்றின. ஏனெனில், சடங்கு வழியே அவர்கள் வழியாகிப் போயது.
12. திருக்குறள், வடமொழி வழியது எனப்பட்டது, மாற்றவரால்.
13. திருக்குறள், கடவுள் மறுப்பும் கண் மூடித்தனக் கண்டிப்பும் உடைய நூல் எனப்பட்டது. பகுத்தறிவாளர்களால்.

14. திருக்குறள், கடவுள் மறுப்பாளராலும் உரை கண்டு மேடை ஏற்றப்பட்டது.

15. திருக்குறள், அமைப்புகள் ஒன்றுபட வில்லை.

16. ஒருமித்த ஓர் அமைப்பும், ஒருமித்த பரப்புதலும் இன்னும் ஏற்படவில்லை.

17. வான் சிறப்பு விண்ணகப் பேற்றைக் கூறவில்லை.

18. காலம் அறிதலில், நற்காலம் அற்காலம் கூறவில்லை.

19. இடமறிதலில், சூலம், சகுனம் சொல்லவில்லை.

20. செல்வம், தவம், வீடு என்பவை புண்ணியத்தால் வரும் என்று கூறவில்லை.

★ ★ ★

## 2. திருக்குறள் பரவிய வகை

1. திருக்குறள், தொல்காப்பியர் வழியது எனத் தெளிவிக்கப்பட்டது.
2. திருக்குறள், புலமையரால் சங்க நாள் முதல் தொடர்ந்து பரப்பப்பட்டது.
3. திருக்குறள், அவ்வவர் சமய நூலாகக் கருதப்பட்டது. திருக்குறள் பலப்பலர் உரையும், திருவள்ளுவ மாலையும் பெற்றது.
4. திருக்குறள், அயன்மொழி – அயற்சமய அறிவரைக் கவர்ந்ததால் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டது.
5. திருக்குறள், அற நூலாக ஆக்கப்பட்டது.
6. திருக்குறள், 1812 ஆம் ஆண்டிலேயே முதல் தமிழ் நூலாய் அச்சிடப்பட்டது.
7. திருக்குறள், 1812 ஆம் ஆண்டிலேயே ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்து அச்சிடப்பட்டது. திருவள்ளுவர் தங்கக் காசும் வெளியிடப்பட்டது. (எல்லீசர்)
8. திருக்குறள், ஆங்கிலம் முதலியவற்றில் பலப்பல மொழி பெயர்ப்புகளைக் கொண்டது
9. திருக்குறள், நாட்காட்டி, நாட்குறிப்பு, திருவள்ளுவர் ஆண்டு என விரிந்தது; புலமைப்பட்டத்து நூலுமாயது.
10. திருக்குறள், பேருந்தில் பொறிக்கப்பட்டது;
11. திருக்குறள், மழலையரும் கற்க வாய்த்தது.
12. திருக்குறள், கவனகக் கலையாலும் மேடையாலும் பரப்பப்பட்டது.
13. திருக்குறள் மாத இதழ்கள் கிளர்ந்தன.

14. திருக்குறள், தமிழர் நெறி நூல் எனப்பட்டது. வாழ்வியல் நூல் எனவும் உயர்ந்தது.

15. திருவள்ளுவர்க் கோட்டமும் சிலையும் உண்டாயின.

16. திருக்குறள், ஓதித் திருமணம் நடைபெற்றது. குடும்பத்தின் எல்லாச் சடங்குகளும் திருக்குறள் வழி நடத்தப் படலாயின.

17. திருவள்ளுவர் விருதுகள் வழங்கப்பட்டன.

18. திருவள்ளுவர் படம்-நூல்- இடந்தோறும் வீடுதோறும் அமைய ஆர்வம் கிளர்ந்தது.

19. திருக்குறள், தொடர்வகுப்புகள் நடத்தப்படலாயின.

20. பள்ளிப் பாடநூலிலும் திருக்குறள் பாடம் - போட்டி - பரிசு - விருது எனப் பெருகியது. திருவள்ளுவர் பீடமும் உண்டாயது.

★ ★ ★

## 3. திருக்குறள் எழுச்சியும் ஏற்றமும் மேலும் பெறச் சில வழிகள்


1. தமிழர், வாழ்வியல் நூலாகக் கொள்ளல்
2. தமிழர், இல்லந்தோறும் திருக்குறள் இடம் பெறல்
3. பட்டிப்படியே நாடளாவிய அமைப்புகள் உண்டாக்கிப் பரப்பல்.
4. கடவுள் நம்பிக்கையுடைய நூல் கண்மூடித்தனம் இல்லா நூல் என விளக்கல்.
5. உலகப் பொதுமைக்கு உலகில் ஒரே ஒரு நூல் எனப் பரப்பல் – உலக நூல் ஆக்கல்.
6. செம்மொழித் திட்டத்தில் உலகப் பரப்பலுக்கு ஆய்வு நிறுவனங்கள் அமைத்தல் – பல்வேறு மொழிபெயர்ப்புகளைச் செய்தல்
7. திருக்குறள் அறங்கள் எளியவை இனியவை என உணரச் செய்தல்.
10. கலைத் துறைகளால் – திரைப்படங்களால் – இணைய ஊடகங்களால் பரப்பப் படல்.
11. வாழ்வியல் தொண்டர்களை உருவாக்கல்.
12. எல்லா விழாக்களிலும் குடும்பச் சடங்குகளிலும் திருக்குறளை முன் வைத்தல்.
13. திருக்குறளுக்கு மாறானவற்றை ஒழித்தல். தமிழற நூல் திருக்குறளே என ஆக்கல்.
14. திருக்குறள் நீதி நூலாக வகுப்புகளில் பயிற்றப்படுதலைக் கட்டாயப்படுத்தல்
15. திருக்குறள் போற்றி பண்பாட்டு வழிபாடாதல்.
16. உள்ளும் புறமும் ஒத்த தொண்டர்களையும் நிறுவனங்களையும் உருவாக்கி உழைத்தல்.
17. கிறித்தவப் பரப்பாளர் போல் பரப்பவை அமைத்தல் – கடனாற்றல்.
18. திருவள்ளுவர் பெயரால் தொழிலகம் அமைத்து வேலை தரல்.
19. திருக்குறள் வாழ்வுக் குடும்பங்கள் கூட்டுக் குடும்பமாக உருவாதல்.
20. ஐக்கிய நாடுகளமைப்பு திருக்குறளை உலக நூலாக அறிவிக்கத் தூண்டல்.

★ ★ ★


இணைப்பு : 4

## வள்ளுவ
## வாழ்வியல்
## எழுநிலை மாடம்


# அறம்



## பொருள்



**காமம்** – அன்பின் ஐந்திணை




## தமிழர் நெறிநூலே திருக்குறள் என்பதற்குச் சான்று :

"அகர முதல னகர இறுவாய்" தொல்காப்பியம் – 1.

"அகர முதல..., .... முயங்கப் பெறின்" திருக்குறள் 1....1330